449

ஸ்ரீ தந்வந்தரயெ நம:

# வைத்ய சந்திரிகை.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின் மாதப் பத்திரிகை.

Vol. 12. | SEPTEMBER 1950 | No. 9

OFFICE OF THE REGISTRAR OF ...
13 NOV 1950
MADRAS




श्रीसुधादिसोदरौषधीशसंभवोज्वला
धीविलासहेतुगोप्रसारशोधितान्तरा॥
कामदा कलावती कवीन्द्रवर्णिता परं
...गश्रया विभातु वैद्यचंद्रिका॥

...ட் S. நாராயணய்யங்கார், மதுரை.
பண்டிட் P. S. ராமசர்மா, கரூர்.

வருஷ சந்தா 5—0—0

# பொருளடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | வரம்பெற்ற படலம் | 1 |
| 2. | அன்னபேதி (பண்டிட் டி. எம். நாராயணசாமி நாயுடு, திருப்பத்தூர்.) | 5 |
| 3. | நேத்ரப்ரகாசிகை (G. ஸ்ரீனிவாசய்யங்கார் தஞ்சாவூர்) | 7 |
| 4. | வைத்யச் செய்திகள் | 10 |
| 5. | க்ஷயரோக நிவாரணம் (Kj. E. S. இராமசாமி ஜோதிடர், வரிசிவைப்பட்டி) | 23 |
| 6. | போபதேவ சதகம் (பண்டிட் S. நாராயணய்யங்கார், மதுரை.) | 29 |


**N. B:-** வைத்ய சந்திரிகையின் சந்தாவை இதுவரை அனுப்பாதவர்கள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.


திருச்சி

**ஆயுர்வேதிக் யூனியன் லிமிடெட்.**

17. சின்னக்கடைத் தெருவு.

தெப்பக்குளம் P. O. திருச்சிராப்பள்ளி.

**வைத்தியர்களுக்கு**

எல்லா சாஸ்திரீய மருந்துகளும் மிகக் குறைந்த விலைக்கு சப்ளை செய்யப்படும்.

விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.


# வரம்பெற்ற படலம்.

199577

மார்க்கண்டேயர், துருவர், பகீரதன், கும்பகர்ணன் போன்ற பலர் நமது தேசத்தில் கடுந்தவம்புரிந்து பெரும் வரங்களைபெற்று வாழ்ந்ததுண்டு. அதுபோல நம்நாட்டு தேசிய வைத்யத்திற்காக வெகுகாலமாக பெரியோர்கள் விடாமுயற்சியுடன் பிரயாசைப்பட்டு தற்பொழுது நமது இந்திய அரசாங்கத்தாரிடமிருந்து அடைந்திருக்கும் பலனை நினைத்துப் பார்க்கும்பொழுது நமக்கு கும்பகர்ணனுக்கு ஏற்பட்ட வரனைப்பற்றி நினைக்காமல் இருக்கமுடியவில்லை. உண்மையில் கும்பகர்ணன் வேண்டியவரன் தன்னைவிட பெரியவர் யாரும் இருக்கக்கூடாது என்பதுதான். ஆனால் அதைப் பொறுக்காத தேவர்கள் சரஸ்வதியை ஏவி நாக்கில் இருந்துகொண்டு தன்னை தூங்கு மூஞ்சியாக்கிக் கொள்ளும்படி செய்தார்கள். இம்மாதிரியே நமக்கும் பலனில் விபரீதமாகும் படியான சூழ்நிலைகள் ஏற்பட்டதைக் குறித்து மனம் வருந்துகிறோம். சோப்ரா கமிட்டியார்களும், அரசாங்கமும் ஆயுர்வேதத்தினிடம் உண்மையில் நல்லெண்ணம் கொண்டவர்களாகவே இருக்கலாம், ஆனால் அவர்கள் முயற்சியால் வரப்போகும் நிலைமை ஆயுர்வேத முறையை மறையும்படி செய்யக்கூடியதாகவே கருதவேண்டியிருக்கிறது. ஜலம், நெருப்பு, காற்று முதலியது உலகிற்கு முற்றிலும் தேவையான பொருள்கள்தான். எதைக் குறைத்து எதைப் பெருமைப்படுத்திக் கூறமுடியும். ஆனால் இவைகளை சேர்த்து உபயோகிக்கும் காலம், பாத்திரத்தில் ஜலத்தைவைத்து அடுப்பில் நெருப்பைப்போட்டு, வீசி பற்ற வைத்து ஜலத்தை சூடாக்குவதற்கு பதிலாக; நெருப்பில், ஜலத்தைவிட்டு விசிறியால் நன்றாக வீசினால் என்னநேரும். இவ்விதம் பல வழிகளில் ஒன்றாக கலக்கமுடியாத முறைகளை சேர்ப்பதற்கு நமது அரசாங்கத்திற்கு மிகுந்த அவசரம் நேர்ந்துவிட்டதை நினைக்க வியப்பும், பீதியும் உண்டாகிறது. வைத்யம் என்பது உயிருடன் போராடும் சாஸ்த்திரம் என்பதை உணர்ந்து அதில் தவறுதலாக நடப்பவர்களை தண்டிக்கும் கடமையையுடைய அரசாங்கம் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும்! நிலைமையை வைத்திய சாஸ்த்திரத்தில் புகுத்தத் துணிவது மிகவும் சாகஸம் என்று சொல்லாமல் இருக்கமுடியவில்லை. 31-8-50ல் டில்லியில் கூடிய சுகாதார மந்திரிகளின் மகாநாடு போயிருக்கும் வழியைப்பார்த்தால் மிகவும் சாவதானமாக செய்யவேண்டிய காரியங்களை அவசரக் கோலம் அள்ளித் தெளிப்பது என்ற மாதிரி செய்திருப்பதாகத் தோன்றுகிறது. முதல் மந்திரியார் வாத பித்த சிலேஷ்மங்களின் தத்வம் விளங்கவில்லைபோல் பேசிவிட்டு அடிப்படையில் இருமுறைகளுக்கும் மிகுந்த வித்யாசம் இருப்பதை ஒப்புக்கொண்டும்கூட ...டு வைத்தியர்களுக்கு நவீன முறையில் பயிற்சியளிக்கவேண்

டியதின் முக்கியத்வத்தை வற்புறுத்துகிறார். இதன் உண்மைக் கருத்து என்னவென்று சற்று யோசிக்க மனம் திகிலடைகிறது. நாட்டு வைத்தியர்களுக்கு நவீன முறைகளில் பயிற்சி அளித்தால் தானாகவே இந்திய முறைகள் க்ஷீணித்து நவீன முறை ஓங்கி விடும் என்று த்வனிக்கிறது. இந்நிலைமையை இந்திய மக்கள் வரவேற்கமுடியுமா? சுகாதார சர்வீசுக்கு தகுதியான முறையாக இருக்கவேண்டுமாம். மேல்நாட்டு சுகாதாரமும், மேல்நாட்டு விஞ்ஞானமும் தான் தகுதியானது என்று நினைப்பது இந்திய சுகாதாரங்களைக் குறித்தோ தர்ம சாஸ்திரங்களைக் குறித்தோ ஸாங்கயம் யோகம் முதலியவைகளைக் குறித்தோ அறிவோ மதிப்போ இல்லாததினால்தான் என்று கருத இடம் ஏற்படுகிறது. உலகில் தெய்வீக சக்திகளையோ இருமைப்பயன்களையோ அடைய தகுதியான சாதனங்கள், ஞானிகளான மஹர்ஷிகளால் இயற்றப் பட்ட சாஸ்திரங்களைத் தவிர வேறில்லை என்று நமது "सत्यमे वजयते", என்ற உபநிஷத்தை நம்பிய அரசாங்கத்தில் ஏன் புலப்படவில்லை. தற்கால வைத்ய முறைகளில் பல புதிய செய்திகள் இருப்பதாக சுகாதார மந்திரி கூறுகிறார். புதிய செய்திகளைப் போல் பழைய செய்திகளும் பூர்ண உபயோகப்படக்கூடியதா? என்று சிறிது காலம் பரீக்ஷித்து பிறகு ஒன்றுசேர்க்க யோசித் தால் போதாதா? பல நூற்றாண்டுகளாக பொறுத்து இருந்த இந்திய வைத்யத்திற்கு தனிப்பட்ட முறையில் அடையவேண்டிய முன்னேற்றங்களுக்கு சமயம் கொடுக்காமல் ஓர் அரை நிலைமை யில் ஒன்று சேர்ப்பது இந்திய முறையின் நலனுக்கு எவ்வளவு தூரம் பொருந்தும். இந்திய முறைகளில் நல்ல படிப்புக்கு வேண்டிய வசதிகளை முதலில் ஏற்பாடு செய்து அதில் பூர்ண ஞானம் பெற்ற புத்திசாலிகளான மாணவர்களை மேல்நாட்டு முறையில் பரிச்சயம் அடையச்செய்தால் அது ஓரளவுக்கு இந்திய வைத்யத்திற்கு பழுதில்லாமல் இருக்கலாம். ஒரே பாஷையில் இல்லாமலும், அடிப்படையில் வேறுபட்டதுமான மேனாட்டு வைத்யம் படித்தவர்களுக்கு ஒரு வருஷத்தில் இந்திய வைத்தியம் படிக்க வசதி அளித்திருப்பது பக்ஷபாத மனப்பான்மையா? அல்லது அறியாமையா? கலப்பு படிப்பில் சேருவதற்குகூட I. S. C. பாசாகவேண்டுமாம். இந்திய வைத்யம் மட்டும் தமிழ், ஸமஸ் கிருதம், சாங்கயம், யோகம் ஒன்றும் தெரியாமல் ஒரு வருஷத்தில் படித்துவிடலாமாம். இந்திய வைத்தியத்திற்கு தமிழ், சமஸ்கிருதம்போன்ற பாஷைகளில் யோக்யதாம்சத்தை நிர்ணயிக்காமல் இருப்பதும், கலப்புப் படிப்பு பள்ளிகளில் இஷ்டப்படி மாணவர்களை சேர்த்து இந்திய வைத்யம் சிரத்தையில்லாமலும், சரியாக தெரிந்துகொள்ளாமலும் பிற் காலத்தில் தொழில் முறையில் இந்திய வைத்யத்தை தொடா மலும் இருக்க வசதியளிப்பதேயாகும். சிரோமணி வித்வான் போன்ற பரீக்ஷைகளில் தேறியவர்களை கலாசாலையில் சேர்க்க தகுதியானவர்களாக நிர்ணயித்திருந்தால் ஆங்கில மு



I. S. C. க்கும், B. S. C. க்கும் கொடுக்கப்பட்ட மதிப்பு இந்திய வைத்திய பாகத்திலும், வைத்திருப்பதாக நம்பலாம். அவ்விதம் வித்வான் சிரோமணி போன்ற பரீக்ஷை பாஸ் செய்த மாணவர் களுக்கு ஐந்து வருஷம் இந்திய வைத்யம் கற்பிக்கப்பட்டு பிறகு இரண்டு வருஷங்களில் மேனாட்டு வைத்யம் தேவை என்று எண்ணக்கூடிய தகுதியான மாணவர்களுக்கு மேற்படிப்புக்கு (Post graduate) வசதி அளித்தால் இரண்டு வைத்யங்களின் தாரதம்யத்தை அறிந்துகொள்ள அவர்கள் ஒருவாறு முன்வரு வார்கள். இந்திய வைத்யர்கள்மூலம் இந்திய சுகாதார சர்வீஸ் என்று தனியாக ஏற்படுத்தி பழைய தர்மங்களை இந்தியாவில் பரவச்செய்து நாகரீகத்தில் ஏற்பட்ட அனுசாரங்களைப்போக்கி வியாதிகள் வராமல் பாதுகாக்க எவ்வளவு அனுகூலமாக இருக்கும். மேல் படிப்புப் படித்து தேறியவர்களை எல்லாத் துறைகளிலும் உபயோகிக்கமுடியும். இவ்விதம் தேசீய மனப்பான்மையுடன் அரசாங்கம் ஆதரவளித்து தேசீய வைத்யத்தை தனிப்பட்ட வழியில் வளர்த்து முன்காலம்போல் அரோக திடகாத்திரர்களாக ஜனங்களை செய்து பார்ப்பதற்குப் பதிலாக பலஹீனமான இந் நிலைமையில் அன்னிய வைத்தியத்திற்கு அடிமைப்படுத்தி இருக்க கூடிய அங்கங்களும் அழித்து பார்க்கவிரும்புவதுபோல் காரியங் களை நிறைவேற்றுவது எவ்வளவு அவசரம். ஆராய்ச்சி நிலையங் களை ஏற்படுத்த தற்பொழுது அவசரம் இல்லை. நன்றாக தனிப் பட்ட முறையில் படிக்க மாணவர்களை ஒரு ஸெட்டு தயார்செய்து பிறகு பழைய வைத்தியர்களுடன் சேர்ந்து ஆராய்ச்சிக்கு வசதி யளிப்பதுதான் சாஸ்திரீய ரீதியில் பலன் அளிக்க உதவியாக இருக்கும் இந்தியாவில் ஒரே வைத்யம் தான் பிற்காலத்தில் இருக்கவேண்டும் என்று எண்ணுவது இந்திய வைத்தியத்தை தனிப்பட்ட முறையில் வளர்த்துவந்து அதுவே பூர்ண குணம் தரக்கூடியதாக இருந்தால் அதிக செலவில்லாத அதை ஆதரிப்பது தானே நியாயம் அவ்விதம் இல்லாமல் அவசரப்பட்டு மேனாட்டு வைத்யம் கலந்த அவியல்முறை என்று தீர்மானிப்பது சரகம், சுச்ருதம் போன்ற அபூர்வ நூல்களில் உள்ள பூர்ண தன்மையை புறக்கணிப்பதாகாதா? சரகம் சுச்ருதம் முதலியதை படித்துப் பார்த்து அதில் ஏது இல்லை, எது போதாது என்று திட்டமாக தெரிந்துகொள்ளாமல் குறைபாடுகள் இருப்பதாக கூறுவது பழி சுமத்துவதாகாதா? எந்த வைத்யமும் பூர்ணமில்லை என்று முதல் மந்திரி கூறுகிறார் ஆயுர்வேதத்தை குருமுகமாக கற்றிருந் தால் அவ்விதம் கூறமாட்டார். இந்திய சாஸ்திரங்கள் எல்லாம் தீர்மானமான சித்தாந்தத்தையுடையதுகள். ஆகையால் மேனாட்டு முறைகள்போலல்லாமல் ஆராய்ச்சி வழிகளில் எவ்வளவு வளர்ந் தாலும் அடிப்படைக் கொள்கைகளில் பூர்ணத்வமுள்ளது. அடிப்படைக்கொள்கைகளை மீறி எந்தவிதமான மாறுதலையும் அடைய முடியாது. இதையெல்லாம் தீர சிந்தித்து பார்க்காமல் மேல் நாட்டு வைத்ய படிப்புக்கு அதிக வழி கொடுத்த கல்லூரி

களில் இந்திய வைத்யக் கல்லூரி என்ற போர்டு மாற்றுதல் சிறிது காலத்திற்கு பிறகு தற்பொழுது இருக்கும் மேனாட்டுக் கல்லூரிகளுடன் இவைகளையும் சேர்த்து இந்திய வைத்தியத்தை இஷ்டபாடமாகச் செய்து ஹைஸ்கூல் சமஸ்கிருதம்போல் மிக குறைந்த ஞானம் உடைய மாணவர்களால் தேசீய வைத்யம் எவ்வளவு மதிப்புடன் கையாளப்படும் என்று சிந்திக்கும்பொழுது பெரியோர் எடுத்த முயற்சிகள் விபரீத பலனுக்கு வந்துவிடும் போல் கலங்குகிறோம். நமது முன்னோர்கள் தெய்வத்தை நம்பி இருந்தாலும்கூட வேத சாஸ்திரங்களை நம்பாதவர்களை நாஸ்திகர்களாகவே கருதினார்கள். அதன் உண்மை என்னவென்றால் தெய்வத்தைப்போலவே வேத சாஸ்திரங்களும் உண்மைக்கு மாறுபடாதவை. நம்பி நடப்பதால் சரியான லக்ஷ்யத்தை அடைய முடியும் என்பதினாலேயே. பௌத்த மதத்தை நாஸ்திக மதமாக நினைத்தும்கூட அம்மதம் வேத சாஸ்திரங்களை மீறி யுக்தி வாதத்தில் செல்லுவதினாலேயே அம்மதத்தை நம்பி இருமைப் பயனை அடைய முடியாது என்ற தீர்மானமேயாகும். ஆகையால் நமது அரசாங்கமும் நாஸ்திக கொள்கையை ஆதரித்து செல்லுமேயானால் நமது சாஸ்திரங்களின் உண்மையை அறிந்து அதனால் கிடைக்கும் நன்மையை நமது தேசமக்கள் அடைய முடியாது.


**BHALLA BROTHERS, (Regd.)**

Musk, Saffron & Asafoetida (Palkayam) Merchants,

**LUDHIANA PUNJAB--INDIA.**

சுத்தமான கஸ்தூரி, குங்குமப்பூ, பவழம், அம்பர், சிலாஜித்து, கோரோசனம், பச்சைக்கற்பூரம், சாலாமிச்ரி, அஷ்டவர்கம், பஸ்மங்கள் இவைகளின் எல்லா ரகங்களும் சேர்க்கை பொருள்களும் யூனானி ஆயுர்வேத வைத்தியங்களுக்கு அவசியமான அவைகள் எங்களிடம் கிடைக்கும்.

விலை ஜாபிதாவுக்கும் மற்ற விவரங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதினால் இனமாக அனுப்பப்படும்.

**பல்லா பிரதர்ஸ், (Regd.)**

கஸ்தூரி வியாபாரி, லூதியானா. (பஞ்சாப்)

குறிப்பு:— எல்லா விவரங்களுக்கும் ஆங்கிலத்திலாவது, ஹிந்தியிலாவது கடிதம் எழுதவும்.




## அன்னபேதி.

(ஜோதிட வைத்திய பண்டிட், டி. எம். முனிசாமி நாயுடு, திருப்பத்தூர், (N. A. Dt )

தமிழில்—துத்தம், தெலுங்கில்—துத்தமு, கன்னடத்தில்—அன்னபேதி, ஆங்கிலத்தில்—சல்பேட் ஆப் ஐயன் (Sulphate of Iron) பெர்ரைஸல்பஸ் (Ferrisulphas) எனப்பெயர்.

அன்னபேதி சாதாரணமாக கனிகளிலிருந்தும், இரும்பு கந்திகளோடு, கந்தகத்திராவகம் விட்டுச் செய்வதுமுண்டு இந்த சரக்கு கட்டிகளாய் இலைப்பச்சை நிறமாய், துவர்ப்பாயிருக்கும். சாராயத்தில் கரையாது. ஜலத்தில் கரையும்; காற்றுப்பட்டால் மேல்புறம் வெள்ளைத் தூளாகிவிடும்; பொரித்தால் ஈரம்போய் வெள்ளைத் தூளாகிவிடும். கடைகளில் சுலபமாகக் கிடைக்கும். பச்சை நிறக் கட்டிகளாக உள்ளதையே மருந்துகளுக்கு உபயோகிக்க வேண்டும்.

லோக சம்பந்தமான அவுஷதங்கள் யாவும் கூடுமானவரை ஆகார பதார்த்தங்களுக்கு சம்பந்தமுள்ளதாகவே இருக்கின்றது. ஆனால் ஆகாரப் பதார்த்தம் தேகத்தை எந்த விதமாகப் போஷிக்கின்றதோ அந்தவிதமாகவே லோக பதார்த்தமும் தேகத்தை போஷிக்க சகாயப்படுகின்றது. ஆகையினால் லோகம், பல விருத்தியுள்ளதாய் இருக்கின்றது. இது அவ்வளவோடல்லாமல் ஜீர்ண சக்தியை அதிகரிக்கவும் செய்கின்றன. சாமான்யமாக லோக சம்பந்தமான மருந்துகள் சாப்பிட்டுவரும்போது மந்தம். மலம் கருப்பு வர்ணமாகவும் வெளிப்படுகின்றது.

லோகம், முக்கியமாக பல விருத்திகரக்கூடியதும், பாண்டு வியாதி என்றால் ரக்தம் குறைந்துபோய் வெளுத்து துர்பலமாக இருக்கும் சமயத்தில் மிகவும் உபயோககாரியாகவுமிருக்கின்றது.

உபயோகம்:— பாண்டு, ரக்த க்ஷீணம், சூதகப்பாண்டு, சூதகக்கட்டு, கர்பப்பிரமேகம், பீலிகை, சோகை முறைக்காய்ச்சல், சூரியாவர்த்தன வலி பயித்தியம், நாள்பட்ட கக்கிருப்பல், கட்டைக்கிருமி இவைகளுக்கு முக்கியமாக உள்ளுக்கு கொடுக்கலாம். அக்கி, மேகவிரணம், சீழ்மூலம், சூதப்பிரசம்சம், கருப்பப்புத்து, இவைகளுக்கு வெளிக்கும் உபயோகிக்கலாம்.

அன்னபேதி 1 குன்றி பிரமாணம் அளவிலேயே ஆரம்பிக்க வேண்டும். இதன் குணம் தெரிய 20, 30 நாள் செல்லும்.

பிரமாணத்தில் இதைவிட அதிகம் உபயோகித்தால் பிரயோஜனப்படாது. குறைந்த அளவில் அதிக நாள் கொடுத்து வருவதுதான் நன்மை பயக்கும்.

மலம் கருப்பு வர்ணமாகத் திரும்பினபோது பிரமாணத்தை இன்னும் குறைத்தே கொடுக்கவேண்டும். மலபந்தம் செய்யுங் குணம் இதற்கு இயற்கையாகவே உண்டு. ஆகையினால் இதனை உபயோகிக்கும்போது வாரத்திற்கொருநாள் ஆமணக்கு எண்ணை அல்லது திரிவிருத் சூரணமாவது இரண்டொருதடவை, தாராளமாக மலம்போக சாப்பிட வேண்டும். இதனை உபயோகிக்கும்போது புளிப்பு வஸ்துக்கள் அதிகமாக உபயோகிக்கக்கூடாது.

இதனை ஜலரூபமாக உபயோகிக்க வேண்டுமானால் எடுத்துக்கொள்க:— அன்னபேதி குன்றி எடை 2, ஓம வாட்டர் அல்லது ஓம கஷாயம் அவுன்ஸ் 6, நிலவேம்பு கஷாயம் அவுன்ஸ் 6, இந்த மூன்றையும் நன்றாகக் கலந்து வைத்துக்கொண்டு வேளைக்கு 1½ அவுன்ஸ் வீதம் தினம் 3-வேளை கொடுத்து வரவும்.

ஸ்திரீகளுக்கு வீட்டு விலக்கம் கட்டுப்பட்டு சரிவர ஏற்படாமல் போனாலும் குசுமவியாதி, பிரதரம் என்னும் பால்வெள்ளை ஏற்பட்டு அதனால் திரேகம் மிகவும் பலஹீனப்பட்டு சக்தி குன்றிப்போய் இருக்கும் சமயத்தில் இதன் கீழ் குறித்துள்ள விதமாய் தயார்செய்து கொடுக்க நல்லவேலை செய்கின்றது.

அன்னபேதி குன்றி எடை 12 சிமை மூசாம்பரம் குன்றி எடை 12, லவங்கப்பட்டை சூரணம் குன்றி எடை 30. இம்மூன்றையும் தேன்விட்டரைத்து அதனை 12 பாகம் செய்து காலை மாலையாக வேளைக்கு ஒருபாகம் கொடுத்து வரவும்.

காய்ச்சல் நாள்பட அடித்து சுரம் நின்றபிறகு ரத்தம் குறைந்து முகம் வெளுத்துப்போய் நடக்க சக்திகுன்றி தலைவலி, உடல்வலி, முதலிய பாதைகள் ஏற்பட்டிருக்கும்போது எடுத்துக்கொள்:— அன்னபேதி, குன்றி எடை 12. மிளகு பொடி குன்றி எடை 15. இந்த இரண்டையும் தேன்விட்டு கலந்து 12 பாகம் செய்து காலை மாலை வேளைக்கு ஒருபாகம் நிலவேம்பு கஷாயத்தில் கலந்து கொடுக்க நல்லபடி திரேகம் பலப்பட்டு சுகமாய் தேறிவிடும். இன்னம் இதனை சுரக்கட்டி ஏற்பட்டிருப்பவர்களுக்கும் கொடுக்க கட்டி கரைந்து சுகப்படும். இதனை நாள்பட உபயோகிக்கும்போது வாரத்திற்கொருநாள் இரண்டொரு தடவை பேதியாக ஏதேனும் மருந்து கொடுத்து வரவேண்டும்.

இன்னும் இதன் தொடர்ச்சி, செந்தூரம் முதலிய அரிய முறைகள் அடுத்த சஞ்சிகையில் வெளிவரும்.



# நேத்ர ப்ரகாசிகை.

( G. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், தஞ்சாவூர். )

## ஜ்யோதி ரோகங்கள்.

ஜ்யோதியை மறைக்கும் ரோகங்கள் 7-விதம்:–(1) நீலகாசம் (2) திமிரம், (3) மந்தாரம், (4) வாதகாசம் (5) பித்தகாசம், (6) கப காசம், (7) திரிதோஷ காசம் எனப்படும்

அதிகப்பசி தாங்குவதினாலும், தலையில் அடிபடுவதினாலும், அதிகபாரம் தாங்குவதினாலும், விளக்கெண்ணெய் தேய்த்துக்கொள்வதினாலும், மிகவும் ஸூக்ஷ்மமான வஸ்துவைப் பார்ப்பதினாலும் ஸூரியனைப் பார்ப்பதினாலும், அதிஸாரம், கிராந்தி, மேகம் முதலிய ரோகங்களினாலும், திரிதோஷ கோபத்தினாலும், ஸந்நிபாதத்தினாலும் ரத்ன பரீக்ஷையினாலும், விஷம ஔஷதங்களை சாப்பிடுவதினாலும் செய்யத்தகாத காரியங்களைச் செய்வதினாலும், வயிற்றுக்கோளாறினாலும், இப்படிப்பட்ட ஸாஹஸ காரியங்களினால் பிரகோபமடைந்த அக்னி மூலாதாரத்திலிருந்து ஹ்ருதந்தரத்திற்கு வருகிறது. அங்கு பிராண வாயுவினால் தாக்கப்பட்டு 4 விதமான உருவத்தை அடைகிறது. 3 உருவம் கீழ்நோக்கிச் செல்லுகிறது. ஒரு அக்னி மாத்திரம் இடை பிங்கலையில் நுழைந்து மெதுவாக ப்ருஹ்மரந்தரம் செல்லுகிறது. அப்பொழுதுதான் மனிதன் அமிருதத்வத்தை அடைகிறான்.

பிறகு அந்த அக்னி (கீழ்நோக்கிச் சென்றது) சீக்கிரம் கீழே இருக்கும் ச்லேஷ்மாவை அடைந்து, விஷாக்னியை உண்டாக்கி, பித்தம், வாயு, கபத்தைத் தீவ்ரமாகச் செய்து விடுகிறது பிறகு வாயு அந்த புத்புதத்தை உலர்த்துகிறது. விஷாக்னி உள்ளிருக்கும் ச்லேஷ்மாவிலிருந்து ஜலத்தை உண்டாக்குகிறது. பிறகு புத்புதத்தில் 2 ஓட்டைகள் உண்டாகின்றன. அப்பொழுது வாயு மூக்கின் நுனியிலும், ஜ்யோதியிலும் ஜலத்தைக் கொண்டுசேர்க்கிறது.

ஒரு மனிதனின் ஆயுள் 120௵. அதைத் திரிதோஷங்களுக்குப் பிரிக்கவும். முதலில் கபத்திற்கு 30-௵, பிறகு பித்தத்திற்கு 30-௵, அதன் பிறகு வாதத்திற்கு 30-௵. பாக்கி 30-௵ 3-ம் கலந்தது.

கபத்தின் 30 வருஷத்தில் கபத்திற்கு முதல் 10-௵ புக்தி, பிறகு பித்தத்திற்கு 10-௵ புக்தி, அதன்பிறகு வாதத்திற்கு 10 ௵ புக்தி. இப்படி பாக்கி புக்தியையும் கண்டுகொள்ளவும்.

தினம் காலையில் முதன் முஹூர்த்தத்தில் கபத்தின் புக்தி, பிறகு பித்தத்தின் புக்தி, அதன்பிறகு வாயுவின் புக்தி.

வாயுவின் புக்தியில் நீலகாசமும், வாதகாசமும், பித்தத்தின் புக்தியில் மந்தாரகாசமும், திமிரமும் பித்தகாசமும், கபத்தின் புக்தியில் கபகாசமும், மூன்று சேர்ந்த புக்தியில் மிச்ரகாசமும் ஏற்படுகிறது.

1. **நீலகாசம்:**— நன்றாகத்தலையில் வலி, ஜ்யோதியில் (பாசிபோல்) நீலஜலம் வருகை இந்த லக்ஷணத்துடன் ஜ்யோதி விரிந்து, பெரிதாகி சிதற அடித்துவிடும். குத்தல் வலி சிலசமயம் சற்று நேரமும் சிலசமயம் நீடித்தும் இருக்கும்.

2. **திமிரம்:**— மிகவும் இருட்டாகப் புலப்படுதலுடன், ஜ்யோதி விரிந்து பரந்து இருக்கும். தலைவலி, காதுப்பின்பக்கம் வலி ஏற்பட்டிருக்கும்

3. **மந்தாரகாசம்**—மத்தியில் எரிச்சலும், வலியும் இருக்கும். வெளுப்பும் கருப்பும் கலந்த நிறத்துடன் கண்ணீர் வடியும்.

4 **வாதகாசம்:**— சூலத்தினால் குத்துவதுபோல் தலைவலி, தலைசுற்றல், தோல் தடித்துக்காட்டுதல், கனல்போன்ற உஷ்ணத்துடன் எரிச்சல். விளக்கெண்ணெய்போல் ஜலம் வருதல், ஜ்யோதி விரிதல் இந்த லக்ஷணங்கள் காணப்படும.

5. **பித்தகாசம்:**— கை, கால், கண், வயிறு தலை, இவைகளில் எரிச்சலும், சிறிது தலைசுற்றல், குத்தல், வலி, வாந்தியுடனும், கோமேதகம் போன்ற ஜலம் வடிதலுடனும் இருக்கும்.

6. **கபகாசம்**— அதிக வாந்தியும், தலையின் பின்புறம் வலியும் ஏற்பட்டிருக்கும்.

7. **ஸந்நிபாதகாசம்** — கை, கால்கள் வெளுத்தும், அவைகளில் எரிச்சலும், தலை சுற்றலும். ஜ்யோதி விரிந்து அதிலிருந்து பல ரத்னங்களின் வர்ணங்களுடன் கூடிய ஜலம் வடிந்துகொண்டுமிருக்கும்.

காச ரோகத்திற்கு ஸாதாரண லக்ஷணம் — தலை, கண், கை, கால்களில் எரிச்சல், வாந்தி, தலைவலி, தலைசுற்றல், அரிப்பு, உடம்புவலி, மலபந்தம், ஜாட்யம், பசி, கனமான ஜலதோஷம் தூக்கம், தூக்கமில்லாமை, ஹிருதயத்தில் படபடப்பு ஆட்டம், பலஹீனம், அபஸ்மாரம், கண்ணீர், பனிபோல் படலத்தில் புகை படருதல், கண்சிவத்தல், இரவில் சுத்தமாகவும், அதிக காந்தியுடனும், தோற்றமளித்தல், பிரபஞ்சம் பச்சை நிறமாக புலப்படுதல் தங்கவண்டு (பூச்சி) சுற்றுவதுபோல் காட்டுதல், சூரியன் சந்திரன் அக்னி இவைகளால் பீடிக்கப்படுதல் விருத்தியாகுதல், அழுக்கான



தோற்றமளித்தல், ஸமீபத்திலிருப்பது தூரத்திலிருப்பது போலும், மேடு பள்ளம் விபரீதமான தோற்றத்துடனும் பகலில் புகைபோல் மறைப்பதும், இரவில் சுத்தமாகத் தெரிவதும் வக்ர பார்வை உண்டாவதும், மேல் பார்வையிலும் மாந்தியம், கீழ்ப் பார்வையிலும் மாந்தியம் தூரத்திலிருக்கும் வஸ்து நெருங்கியும், ஸ்வரூபம் மாறி அநேக தார்க்குணங்களுடன் கூடிக்கொண்டும் இப்படிப்பட்ட லக்ஷணங்கள் 7 காசங்களுக்கும் ஸாதாரணமாக இருக்கும்.

இந்த பூமியில் மஹேச்வராதி தேவர்களின் தீபத்தை அபஹரித்தல் (தீப எண்ணெய் முதலியவற்றைத் திருடுதல்) சகோதரர்களின் சொத்தை வஞ்சித்தல், குரு நிந்தனை, சிவா பராதம், உபகாரம் ஒன்றுமே செய்யாதிருத்தல், முதலிய பாபங்களினால் நேத்ர ஜ்யோதி ஸ்தானத்தில் 7-வித காச ரோகங்கள் உண்டாகின்றன.

ப்ராஹ்மண ஸங்கர்ப்பனை, ருத்ராபிஷேகம், சிவனை பஞ்சாமிருதத்தினால் அபிஷேகம் செய்விப்பது, பக்தியுடன் தீப தானம் செய்வது, சுக்ல பக்ஷத்து அஷ்டமியில் ருத்ராபிஷேகம் செய்வித்து ஸஹஸ்ரநாமார்ச்சனை செய்வது. ஸூர்ய நமஸ்காரம் செய்வது, பெரியோர்களிடத்தில் பக்தியை நிரந்தரமாக வகிப்பது மஹன்யாஸம், தேவீகவசம், இவைகளைப் பாராயணம் செய்வது, தேவர்களிடத்தில் பக்தி வகித்தல் பிரதோஷ பூஜை, நெய் தீப தானம், பஞ்சகவ்யத்தால் உடலை சுத்தி செய்து கொள்வது, இவைகளால் காச ரோகங்கள் நீங்கும்.

தங்கத்தால் பிரதிமை செய்து அதில் காசதேவனை ஆவாஹனம் செய்து தக்ஷிணையுடன் ப்ராஹ்மணனுக்கு தானம் செய்யவேண்டும்.

சாஸ்திரோக்தமாகப் பஞ்சகவ்ய கிருதத்தைத் தயார் செய்யவும் அதை சிவபூஜையுடன் "अमृतनामक मृत्युञ्जय महामन्त्र"த்தால் ஒரு லக்ஷம் தடவை ஜபித்து ஷை கிருதத்தை உட்கொண்டு வர எல்லாவித காச ரோகங்களும் நிவர்த்தியாகும்.

कृशांगकं कृष्णवर्णं भग्ननेत्रं करालकम्
हस्ते रक्तकपालकुन्त धरिणं दान्तं च
शोकोल्बणं शुष्कास्यं वक्रदन्तं
मलिनवसनकं काच पैशाचदेवम् ॥

இந்த ச்லோகத்தை தங்கப்பிரதிமையில் காசதேவனை ஆவாஹனம் செய்யும்பொழுது தியானம் பண்ணவேண்டியது. இது காச தேவனின் தியான ச்லோகம்.

இதன் பொருள்:— "இளைத்த உடம்பும், கருநிறமும், உருண்டு புதுங்கி நிற்கும் விழிகளும், கோர உருவமும், கையில் ரக்தம் நிறைந்த கபாலமும், குந்தமும் வைத்திருப்பவரும், அடங்கி சோகம் மிகுந்து காணப்படுபவரும் உலர்ந்த வாயும், கோணலான பற்களும், அழுக்கேறிய உடையுமுள்ள காச பைசாச தேவன்".

குறிப்பு:— த்யான ச்லோகம் சரியானபடி இல்லை. பதக் குறைவுடன் இருப்பதாகத் தோன்றுகிறது. சரியான ச்லோகம் கைவசம் இருப்பவர்கள் தெரியப்படுத்தினால், அதைப் பிரசுரம் செய்ய சௌகரியமாகவிருக்கும்.

'நேத்ர ப்ரகாசிகை' யில் அநேக இடங்களில் வாசகம் சரியாக இல்லை. பதங்களும் விடப்பட்டிருக்கின்றது இதர கிரந்தங்களைக்கொண்டு ஒத்துப்பார்த்து கூடியவரையிலும் ச்லோகங்களை ஒழுங்குபடுத்தி தமிழில் பொருள்படுத்தப் பட்டிருக்கிறது.

## வைத்தியச் செய்திகள்.

## இந்திய வைத்திய சாஸ்திரம்

### சோப்ரா கமிட்டியின் முக்கிய சிபார்சுகளை அமல் நடத்துக.

### பார்லிமெண்டு மெம்பரின் வற்புறுத்தல்.

இந்திய பார்லிமெண்ட் அங்கத்தினர் டாக்டர் வி. சுப்பிரமணியம் அவர்களுக்கு, திருச்சி ஆயுர்வேத சபையினர் 26–8–50 மாலை தென்னூர் ஆத்ரேய ஆயுர்வேதசாலை கட்டிடத்தில் ஒரு தேநீர் விருந்தளித்தனர். சபை தலைவர் ஸ்ரீ எஸ். எம். சுந்திரராஜாசாரியார் விருந்தினரை வரவேற்றார்.

டாக்டர் சுப்பிரமணியம் பேசுகையில் 1948-ம் வருஷத்தில் சோப்ரா கமிட்டியினர் இது விஷயமாக தங்களது அறிக்கையை சமர்ப்பித்து விட்டனர் என்றும், அது விஷயமாக மத்திய சர்க்கார் ஒரு முடிவுக்கும் வந்துவிட்டனர் என்றார். ஆயுர்வேத சாஸ்திரத்தில் ஆராய்ச்சி நடத்த அதிலுள்ள உயர்ந்த தத்துவங்களைக் கண்டுபிடிப்பதற்காக பண்டிதர்களின் கமிட்டியொன்று நியமிக்கப்பட்டிருக்கின்றது என்றார்.

முதல் 5 வருஷங்கள் நவீன வைத்திய முறைகளில் கல்வி கற்பித்த பிறகு மாணவர்கள் விரும்பினால் அவர்கள் ஆயுர்வேதம் முதலிய இந்திய வைத்திய சாஸ்திரங்களை படிக்கலாம் என்று சிலர் கூறுகின்றனர் என்றும் ஆனால் தற்போது நம் நாட்டிலுள்ள பொருளாதார நிலைமையில் முதல் 5-வருஷம் நவீன வைத்திய முறைகளைப் படித்த பிறகு மற்றொரு 5



வருஷம் இந்திய வைத்திய சாஸ்திரத்தை படிக்க யாரும் முன் வரமாட்டார்கள் என்றார். 5 அல்லது 6 வருஷங்கள் கல்வி கற்பித்து சிறந்த ஆயுர்வேத வைத்தியர்களை உண்டாக்கலாம் என்று தனக்கு நம்பிக்கையிருப்பதாகக் கூறினார்.

தேசீய ஹெல்த் சர்வீஸ் சம்பந்தமாக சர்க்கார் ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்பு நவீன வைத்திய முறைகளில் சிலவற்றை புகுத்தப்பட்ட இந்திய வைத்திய சாஸ்திரம் இந்த சர்வீஸ்களில் நன்கு பயன்படுமா என்பதை பரிசீலனை செய்யுமாறு சர்க்காரைக் கேட்டுக்கொண்டார். தன்னுடைய அபிப்பிராயத்தில் ஒரு சிறந்த தேசீய வைத்திய சர்வீசை அமைக்கும் விஷயத்தில் இந்திய வைத்திய சாஸ்திரம் நன்கு பயன்படும் என்று கூறினார். நம் நாட்டிலுள்ள வைத்தியர்களை ரிஜிஸ்தர் செய்ய ஒரு சட்டம் இயற்றப்பட வேண்டியது அவசியம் என்றார்.

கடைசியாக இந்திய வைத்திய சாஸ்திரத்தில் கல்வி புகட்டப்படும் பள்ளிக்கூடம், காலேஜ் இவற்றில் மேற்படி கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டுமென்றும், இந்திய வைத்திய சாஸ்திரம் சம்பந்தமாக சோப்ரா கமிட்டியின் முக்கிய சிபார்சுகளை அமுல் நடத்தவேண்டுமென்றும் சர்க்காரைக் கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீ வி. பி நடராஜ சாஸ்திரி வந்தனோபசாரம் கூறினார்.

## ஆயுர்வேத பட்டதாரிப் படிப்பு.

### திருவாங்கூர் சர்க்கார் அறிவிப்பு.

திருவனந்தபுரம் ஆயுர்வேத கல்லூரிகளில் படித்துத் தேறியவர்களுக்கு இதுவரை "வைத்ய கலா நிதி" என்ற சர்டிபிகேட் கொடுத்து வந்திருப்பதற்குப் பதிலாக வைத்யப்பட்டம் (டிப்ளமா) கொடுக்கப்படும்

சர்க்கார் இதுபற்றிய விவரத்தை அறிவித்திருக்கிறது இது சம்பந்தமான பாடத்திட்டங்கள் முதலிய, விதிகளை ஆயுர்வேத பாடத்திட்ட சர்வ கலாசாலைக் குழு பரிசீலனை செய்யும்

திருவாங்கூர் சர்வ கலாசாலை சிண்டிகேட் இதற்காக 24 ஆயுர்வேத ஆசிரியர்கள் அடங்கிய கமிட்டியொன்றை நிறுவியது.

ஆயுர்வேத கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் செனேட்டின் முடிவை அமல் நடத்தும் முன்னால் செப்டம்பர் 5 ந் தேதியன்று பரீட்சை ஆரம்பிக்கப்படுமென்று சர்க்கார் வெளியிட்ட அறிக்கையை ஆட்சேபித்து உண்ணாவிரதமிருந்து வருகிறார்கள். ஒருவர் மிகவும் பலஹீனமாக இருந்ததினால் இரு தினங்களுக்கு முன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

## 31—8—50ல் கும்பகோணத்தில் கூடிய நாட்டு வைத்தியர்கள் சங்கங்களின் ஆலோசனைக் கூட்டம்.

1950-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 31-ம் தேதி கும்பகோணம் ஸ்ரீ P. பாக்கியம் பிள்ளை அவர்கள் கட்டிடத்தில் காலை 10-30 மணிக்கு கும்பகோணம் ஐக்கிய வைத்திய சங்கச் சார்பில் கூட்டப்பெற்ற ஆலோசனைக் கூட்டத்திற்கு தமிழ் மாகாணத்திலுள்ள சென்னை முதல் திருநெல்வேலி வரையுள்ள எல்லா முக்கிய சங்கங்களும் தங்கள் பிரதிநிதிகளைக்கொண்டு கலந்துகொண்டன. பன்னிரெண்டு சங்கங்கள் நேரிலும் மற்றவை கடிதங்கள் மூலமாகவும் கலந்துகொண்டன.

முற்பகல் கூட்டத்திற்கு சென்னை மாகாண சித்த வைத்திய சங்க காரியதரிசி கும்பகோணம் ஸ்ரீ P. கோவிந்த பிள்ளை அவர்கள் தலைமையின்கீழும், பிற்பகல் கூட்டத்திற்கு தமிழ்நாடு சித்த வைத்திய சங்கம் காரியதரிசி திருநெல்வேலி சித்தயோகி சுவாமி சுந்தர மகாலிங்கம் அவர்கள் தலைமையிலும் நடந்தது.

பழனி ஸ்ரீ R. M. K. வேலுச்சாமி பிள்ளை அவர்களின் கீழ்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

### தீர்மானம்.

1. இந்திய வைத்தியர்கள் B கிளாஸ் ரிஜிஸ்டருக்காக சென்டரல் போர்டுக்கு செய்துகொண்டுள்ள மனுக்களை அரசாங்கம் தள்ளுபடிசெய்து அவர்கள் கட்டிய பணத்தை திருப்பிக்கொடுக்கும்படி உத்திரவு செய்திருப்பதற்கு காரணங்கள் என்னவென்று காருண்ய சர்க்காரும், சென்னை இந்திய வைத்திய சபையாரும் (Central Board of Indian Medicine) பதில் சொல்லும்படி இக்கூட்டம் கேட்டுக்கொள்வதோடு, காருண்யம் மிகுந்த மாகாண சர்க்காரின் இந்த உத்திரவுக்கு இக்கூட்டம் தங்களின் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

2. இங்கே நேரில் பங்கு கொண்டுள்ள பன்னிரெண்டு சங்கங்களும் குடந்தை ஐக்கிய வைத்திய சங்க ஆதரவில் ரிஜிஸ்டர் சம்மந்தமான காரியங்களை செய்துகொள்ள ஏகமனதாக ஒப்புக்கொண்டு, இதற்காக நாட்டு வைத்தியர்கள் பதிவுச் செயற் கமிட்டி (Indian Medical Practitioners Registration Committee) என்ற பெயருடன் ஒரு கமிட்டியை நியமிக்கப்பட்டது.

### கமிட்டியின் மெம்பர்கள்.

1. ஸ்ரீ R. S. மணி அவர்கள், ஐக்கிய வைத்திய சங்கம், கும்பகோணம்.
2. ,, சுவாமி சுந்தர மகாலிங்கம் அவர்கள் தமிழ்நாடு சித்த வைத்திய சங்கம், திருநெல்வேலி.
3. ,, அ இராஜகோபால் பிள்ளை அவர்கள், மதுரை சித்த வைத்திய சங்கம், மதுரை.



4. ஸ்ரீ M. K. சின்னமலுக்கர் அவர்கள், பெரியகுளம் சித்த வைத்திய சங்கம், பெரியகுளம்.
5. ,, T. R. செல்லப்பெருமாள் அவர்கள், துறையூர் தமிழ் சித்த வைத்திய சங்கம், துறையூர்.
6. ,, K அந்தோணிசாமி பிள்ளை அவர்கள், பெரம்பலூர் சித்த வைத்திய சங்கம், பெரம்பலூர்.
7. ,, P கோவிந்தப்பிள்ளை அவர்கள், இந்திய பிராசீன வைத்திய சமாஜம், கும்பகோணம்.
8. ,, ஜி கந்தசாமி ராஜு அவர்கள், தமிழ் நாடு சித்த வைத்திய யூனியன், லால்குடி.
9. ,, P வடிவேல் முதலியார் அவர்கள், சென்னை சித்த வைத்திய சங்கம், சென்னை.
10. ,, சீனிவாச சர்மா அவர்கள், கோவை அகஸ்தியர் சித்த வைத்திய சங்கம், கோயம்புத்தூர்
11. ,, R. M. K. வேலுச்சாமி பிள்ளை அவர்கள், சென்னை மாகாண சித்த வைத்திய சங்கம், பழனி.
12. ,, L நாராயணசாமி வைத்தியர் அவர்கள், திருச்சி சித்த வைத்திய சங்கம், மாந்துறை, லால்குடி.

மேற்கொண்டு 4 சங்கங்கள் கடிதமூலம் ஒப்புக்கொண்டுள்ளன.

டிெ கமிட்டியின் காரியங்களை கவனிப்பதற்காக லால்குடி ஸ்ரீ ஜி. கந்தசாமிராஜு அவர்களை பொதுக்காரியதரிசியாகவும், கும்பகோணம் ஸ்ரீ R. S. மணி அவர்களை உதவிக் காரியதரிசியாகவும் கூட்டம் ஏகமனதாகத் தேர்ந்தெடுத்தது.

நாட்டு வைத்தியர்கள் பதிவுச் செயற் கமிட்டிக்கு உதவி புரியவும் ஒத்துழைக்கவும், நிதி வசூலிக்கவும் பிரசாரம் புரியவும் முறையே ஆறு பேர்கள் கொண்ட ஓர் நிதிக்கமிட்டியும், மூன்று பேர்கள் கொண்ட ஒரு பிரசாரக் கமிட்டியும் தேர்ந்தெடுத்தபின் இரவு 8½-மணிக்கு கூட்டத்தை கூட்டிய ஸ்ரீ R. S. மணி அவர்கள் எல்லோருக்கும் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது நிறைவேறியது

சுதேச வைத்திய முறை கமிட்டியார், ஓமியோபதிக் விசாரணை கமிட்டியார் இவர்கள் வெளியிட்ட அறிக்கைகளை யோசனைசெய்ய மூன்றுவது சுகாதார மந்திரிகளின் கூட்டத்தாரால் நியமிக்கப்பட்ட கமிட்டி 31—8—50, 1—9—50 இரண்டு தினங்களிலும் டில்லியில் கூடி பேசின விஷயங்களின் குறிப்பு கீழே தரப்பட்டிருக்கிறது.

### சுதேசமுறை வைத்தியம்.

கனம் மந்திரி டாக்டர் T. S. S. ராஜன் தலைமை வகித்தார். பூர்வாங்க விவாதத்தின் பிறகு, 1946-ஆம் அக்டோபர் மாதத்தில் கூடிய மந்திரிகளின் முதல் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட சிபார்சுகளை கமிட்டி ஒத்துக்கொண்டது. அவையாவன :—

1. அடியில்கண்டபடி மத்திய, மாகாண அரசாங்கங்கள் வேண்டுவன செய்யவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

(a) சுகமான வாழ்வு நீடித்திருக்கவும், வியாதிகளை தடுத்து குணப்படுத்தவும், ஆயுர்வேத, யூனானி என்ற சுதேசி முறைகளை விஞ்ஞான ரீதியாக துருவி ஆராய்ச்சி செய்தல்.

(b) சுதேசி முறைகளில் பட்டமும், பட்டயமும் பெறுவதற்கு (Degree & Diploma) கல்வி புகட்ட பள்ளிகளையும் கல்லூரிகளையும் ஸ்தாபித்தல்.

(c) மேல்நாட்டு வைத்திய பட்டதாரிகளுக்கு சுதேச வைத்திய முறையில் போதித்தல்.

2. பொதுவான திட்ட கமிட்டியின் 13-வது தீர்மானத்தின்படி ஆயுர்வேத யூனானி முறைகளை கையாளும் வைத்தியர்களுக்கு அவசியமான அளவு சுகாதார நிபுணர்களாக்குவதற்கு டாக்டர்களாகவோ, திரேக வளர்ச்சி மேதாவிகளாகவோ, ஆரோக்கிய விருத்தி அதிகாரிகளாகவோ, நர்சுகளாகவோ, மருத்துவச்சிகளாகவோ மேற்கொண்டு உயர்ந்த முறையில் பயிற்சி அளித்து அவர்களையும் பொருப்பு வாய்ந்தவர்களாக சேர்த்துக் கொள்ளுதல் வேண்டுமென இந்த மகாநாடு தீர்மானிக்கிறது.

மாகாண சர்க்காருக்கு இந்திய சர்க்கார் சொல்லியிருக்கும் யோசனையில் மேலே 1-(a), (c) கூறப்பட்ட விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. 1-(b) பொறுத்த வரையில் சுதேச வைத்திய முறையில் பட்டத்துக்காக படிப்பும், பட்டயத்துக்காக படிப்பும் இருக்கவேண்டுமென்று கமிட்டி தீர்மானம் செய்தது. தேச முழுவதிலும் ஆயுர்வேத யூனானி பிரிவுகளிலும் கையாளப்படவேண்டிய முக்கிய திட்டங்களை விரிவாக இந்த கமிட்டி ஆலோசனை செய்தது. முடிவை இந்த குறிப்பில் சுருக்கி கூறப்பட்டிருக்கிறது.

### பதிவு செய்யப்படாத வைத்தியர்கள் - தடுத்தல்.

பதிவு செய்துகொள்ளாத வைத்தியர்கள் சுதேச முறையில் சிகிச்சை செய்வதை தடுக்கவேண்டுமென்ற பிரசினை ஏகமனதாய் ஒப்புக்கொள்ளப்படவில்லை. பாமர வைத்தியர்களை ஒழித்துவிடவேண்டுமென்று சிலர் கூறினார்கள். மற்றையவர்கள் இந்த விஷயத்தை தீர்மானிக்கும் பொருப்பு மாகாண சர்க்காருக்கு விட்டுவிட வேண்டுமென்றும் அபிப்பிராயப் பட்டார்கள்

## சுதேச முறையில் பட்டமும்—பட்டயமும்.

### A. பிரதம கல்வி அறிவு நிபந்தனைகள்.

| பட்ட முறை. | பட்டய முறை. |
|---|---|
| (a) I. Sc. பிரகிருதி சாஸ்திரம் Physics)<br>ரசாயனம் (Chemistry)<br>ஜீவ வர்க்கம் (Biology) | (a) மெட்ரிகுலேஷன் பயிற்சி காலங்களில் வேண்டிய அளவு பிரகிருதி, ரசாயனம், ஜீவ வர்க்கம் இவைகளில் கற்பித்தல் 5-வருடத்திற்குள் I. Sc. மட்டம் உயர்த்தல் வேண்டும். |



(b) மேற்சொன்ன இரு வகைகளில் ஆயுர்வேத மாணவர்களுக்கு சமஸ்கிருத கல்வியும்; யூனானி மாணவர்களுக்கு அராபிக், பெர்ஷியன் கல்வியும் போதுமான அளவு இருக்க வேண்டும்.

### B. கிளினிக்—புறப்படிப்பு.

பட்ட முறைக்கும் பட்டய முறைக்கும் அடியிற்கண்ட பாடங்கள் தற்கால ஔஷத முறையின்படி போதிக்கப்படவேண்டும்.

அனாடமி, பிசியாலஜி, பாத்தாலஜி, ஐஜீன், ரேடியாலஜி, வைத்திய நியாய சாஸ்திரம், டெக்ஸிகாலஜி.

ஒவ்வொரு பாடத்திலும் பட்டமுறைக்கு இந்திய மெடிகல் கவுன்சில் நிர்ணயித்திருக்கும் அளவுப்படிக்கும் பட்டய முறைக்கு மெடிகல் லைசென்ஷியேட் திட்டப்படிக்கும் போதனா முறை ஏற்படுத்தல்வேண்டும். சுதேச முறையில், பிஸியாலஜி, பாத்தாலஜி இந்த இரண்டிலும் போதிக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

### C. கிளினிக்—அகப்படிப்பு.

இரண வைத்தியக் கல்வியில் கண் (Ophthalmology, Otorhy-nology) பிரசவம் (Obstetrics) மர்மஸ்தானம் (Gynacology) முதலிய அறிவை தற்கால முறைகளைக்கொண்டு பட்ட வகுப்புக்கும் பட்டய வகுப்புக்கும் போதனை செய்தல் அவசியம். பட்ட வகுப்புக்கு யூனிவர்சிடி அளவிலும், பட்டய வகுப்புக்கு லைசன்ஷியேட் அளவிலும் போதனை அளவிடப்பட்டு அமையவேண்டும்,

**D. Pharmacology. Materia Medica, Thereanpentics, Clinical Medicine.** இந்த பாடங்களை தற்கால முறைப்படியும், சுதேசி முறையில் குறிப்பிட்டிருக்கும் முறைப்படியும் கற்பிக்கவேண்டும். இங்கேயும் கூட ஒவ்வொரு பாடத்திலும் பட்டமுறைக்கு இந்திய மெடிகல் லைசன்ஷியேட் குறித்த அளவுக்கும் கற்பித்துக்கொடுக்கவேண்டும்.

குறிப்பு— மேற்சொன்ன C. D. இவைகளைப்பற்றி மாகாண சர்க்காரின் சொந்த அபிப்பிராயத்தையும் பண்டிட் கமிட்டியின் சிபார்சுகளைப்பற்றிய அபிப்பிராயத்தையும் மத்திய சர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட கமிட்டியார் செய்திருக்கும் சிபார்சின் அபிப்பிராயத்தையும் தெரிந்துகொள்ளவேண்டுமென்று இந்த மகாநாடு தீர்மானம் செய்தது.

### E. பயிற்சிகால அளவு.

(a) பட்ட வகுப்புக்கு (Degree) 5 வருஷம்.

(b) பட்டய வகுப்புக்கு (Diploma) 4 வருஷம்.

10 வருஷங்களுக்குள்ளாக பட்டய வகுப்பு ஸ்தாபனங்களெல்லாம் பட்ட வகுப்புக்கு உயர்த்தப்படவேண்டும்.

(c) ஆயுர்வேத யூனானி முறைகளில் பயிலவேண்டிய மேல்நாட்டு வைத்திய பட்டதாரிகளுக்கு 1 வருஷம்.

### F. போதனு ஏற்பாடுகள்.

கிளினிக் புறக்கல்வியில் மாணுக்கர்களுக்கு பொது கல்வி போதிக்கப்படவேண்டும் என்பது விரும்பத்தக்கது. சாத்தியப்பட்டால் நவீன வைத்திய முறையை பயில்பவர்களுடன் சேர்ந்து வாசிக்கவேண்டும்.

சுதேச முறையில் பயிலும் மாணவர்களுக்கு கிளினிக் போதனையில் தனிப்பட்ட விசேஷ முறையைக் கையாளுதல் அவசியம். இவர்களுக்காக சகல அம்சங்களும் பொருந்தியும் நிறைய படுக்கை சௌகரியமுள்ள ஆஸ்பத்திரிகளில் நல்ல பயிற்சியை இவர்கள் பெறவேண்டும். போதனுசிரியர்களுக்கு போதிய சம்பளமும் அளிக்கப்பட வேண்டும்.

### G. சம்பளம்.

மாகாண சுகாதார சர்வீஸில் வேலை செய்யும்போது, போதனுமுறையின் காலமும் திட்டமும் நவீனமுறை டாக்டர்கள் பரிசைக்கு சமமாக இருக்குங்காலத்தில், அவர்களுக்கு அளிக்கும் சம்பளத்தைப்போல இதில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கும் அளிக்கப்படவேண்டும்.

### H. ஸ்தாபனம்.

ஒவ்வொரு மாகாணத்திலும் குறைந்தது ஒரு கல்லூரியாவது மேற்கண்ட திட்டப்படி நிறுவப்படுவது அவசியமென்று சிபார்சு செய்யப்படுகின்றது.

### I. ஆராய்ச்சி.

(a) விரிவான முறையிலும், சோப்ரா கமிட்டி சிபார்சுகளின்படியும் ஆராய்ச்சி முறையை விருத்தி செய்யவேண்டும். சுதேசி முறையின் திட்டத்திலும் மருந்துகள், ஆதாரங்கள், அனுபவங்கள் இவைகளிலும் கவனத்தை முக்கியமாக செலுத்தவேண்டும்

ஆராய்ச்சி முறை செவ்வனே நடப்பதற்காக வேகமாகவும் உறுதியுடனும் நடப்பதில் இந்திய சர்க்கார் விசேஷமாக கவனம் செலுத்தி முன்னேற்றத்தை அடையச் செய்வார்கள். ஏனெனில் இந்த வழியில்தான் அநேக சிக்கல்களை தீர்க்க முடியும்.

(b) இந்திய சர்க்காரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஆயுர்வேத ஆராய்ச்சிசாலையின் டைரக்டர், நமது தேசத்தில் ஆயுர்வேத அபிவிருத்தியைப்பற்றிய எல்லா விஷயங்களையும் கவனித்து சர்க்காருக்கு சிபார்சு செய்யவேண்டியவராகிருர்

(c) படிக்கவேண்டிய பாட புத்தகங்களை இயற்றுவதிலும், பிரசுரிப்பதிலும், தொகுப்பு முறையிலும் வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

## ஹோமியோபதி.

### J. வாசிப்பின் காலம்.

பட்ட முறை 5 வருஷம்.—பட்டய முறை 4 வருஷம்

### K. பயிற்சி திட்டம்.

இந்த இரண்டு முறைகளுக்கும் சுதேச வைத்தியத்துக்கு கமிட்டியாரால் செய்யப்பட்டிருக்கும் சிபார்சுகள் பொருந்தும்



### L. யோக்கியதை.

தற்கால வைத்திய முறையில் ஆயுர்வேத, யூனுனி, ஹோமியாபதி வகைகள் தனிப்பட்டு விளங்கவேண்டும் ஒன்ருெடொன்று கலந்ததாக இருத்தல் கூடாது

### M. ஆராய்ச்சி.

ஹோமியாபதி விசாரணைக் கமிட்டியார் செய்திருக்கும் சிபார்சுகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

## ஆயுர்வேத, யூனுனி, ஹோமியாபதித் தொழில்களின் பதிவும், நிபந்தனையும்.

பதிவுக்கும் தொழில் செய்வதற்கும் நிபந்தனைகளை செய்ய நியமிக்கப்பட்ட மாகாண வைத்திய போர்டுகள் கீழ்கண்டவைகளை கவனிக்கும்.

கல்வியில் குறித்த முறை, போதனையின் மேற்பார்வை, தொழிலின் நடத்தை இந்த போர்டுகளுக்கு கல்வி ஸ்தாபனங்களை உண்டாக்குவதிலும், அவைகளை ஆளுவதிலும் சில மாகாணங்களில் யோசித்துக்கொண்டிருப்பது போல அதிகாரங்கள் கொடுக்கப்படமாட்டா. இத்தகைய வேலைகளுக்கு வேறு ஸ்தாபனங்கள் ஏற்பட வேண்டும் 5 வருஷம், 4 வருஷம் வாசிப்பு முடித்தவர்களுக்கு பதிவு செய்து கொள்ளும் உரிமையுண்டு. மெடிகல் போர்டில் அங்கம் வகிப்பவர்கள் ஷை முறைகளில் தொழில் செய்பவர்களாயிருப்பதுடன், நவீன வைத்தியத்திலும் தொழில் செய்யும் யோக்கியதையுடையவர்களாயிருப்பது அவசியம். போர்டில் ஒரு சட்ட நிபுணருமிருக்கலாம்,

### முடிவு.

பதிவு செய்துகொள்ளாத நபர்கள் தொழில் செய்வது தடுக்கப்பட்டிருக்கிறது என்ற விதியை தவிற மேற்சொன்ன எல்லா விஷயங்களையும் கமிட்டி ஒப்புக்கொண்டுவிட்டது இந்த ஒரு விஷயத்தில் மட்டும் அபிப்பிராய பேதம் இருந்தது

## திருச்சி ஆயுர்வேத சபை,

27-சின்னக்கடைவீதி, தெப்பக்குளம் P. O. திருச்சிராப்பள்ளி.

திருச்சி ஆயுர்வேத சபையின் விசேஷ கூட்டம் ஒன்று 17–9–50 ல் கீழ்கண்ட விஷயத்தை பரிசீலனை செய்ய கூடிற்று

சுதேச வைத்தியத்தைப்பற்றி நியமிக்கப்பட்டிருந்த கமிட்டியின் அறிக்கையை கவனிக்க, மூன்ருவது சுகாதார மந்திரிகளின் கூட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட கமிட்டியாரால் 31—8–50, 1—9—50 இந்தத் தேதிகளில் புது டில்லியில் ஒப்புக்கொள்ளப்பட்ட சிபார்சுகளை கவனிக்க இந்த விசேஷ கூட்டம் நடந்தது.

சபையின் தலைவர் ஸ்ரீ S. M. சுந்தரராஜாசாரியார் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்

விரிவான விவாதத்திற்கு பிறகு அடியில்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டன.

1 31—8—50 தேதியில் டில்லியில் கூடிய 3-வது சுகாதார மந்திரிகள் கூட்டம் முடிவில் பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேருவும், மந்திரி ஸ்ரீமதி ராஜகுமாரி அமிருதகௌரியும் செய்திருக்கும் உபந்யாசங்கள் வழி தவறியிருப்பதாகவும், ஆயுர்வேத நன்மைக்குப் பொருந்தாமலிருப்பதாகவும் தெரிவதைக் குறித்து இச்சங்கம் மிகக் கவலை கொள்ளுகிறது. வாத, பித்த, கப, என்ற திரிதோஷ கோட்பாடு ஐரோப்பாவில் மத்திய காலத்தில் பரவியிருந்த எண்ணங்களை ஒத்திருந்ததென்றும், இந்த கோட்பாடு மெதுவாக நாளடைவில் அனுபோகத்திலும், பரீக்ஷா முறையிலும் விஞ்ஞான மூலமாக சரியல்லவென்றும் உண்மையல்லவென்றும் நிராகரிக்கப்பட்டுவிட்டதென்றும் பிரதமர் நேரு சொல்லியிருப்பது உண்மையில் ஆதாரமற்றது மட்டுமல்ல உண்மையுமல்ல என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறது.

மேலும், ஆயுர்வேத முறையை ஆழ்ந்து பரிசோதனைசெய்த சோப்ரா, சீனிவாசமூர்த்தி, பனர்ஜி போன்ற மேதாவிகளை தலைமையாக கொண்ட கமிட்டியார், ஆயுர்வேதமானது திடமான சாஸ்திர சம்மதமான கொள்கைகளை அடிப்படையாக கொண்டதென்றும், நமது நாட்டின் மக்களுக்கு முன்னும், இப்பொழுதும், இனியும் திருப்திகரமாக சிகிச்சையளிக்கவல்லது என்றும், தடுப்பு முறையிலும், குணமாக்கும் முறையிலும் தாழ்வுள்ளதல்லவென்றும் உறுதியாக சொல்லியிருக்கிறார்கள்

2. மத்திய மாகாண அரசியல் சுகாதார மந்திரிகள்

(a) சுதேச வைத்திய முறை கமிட்டியார் அறிக்கைகளைப்பற்றி தீர்க்க யோசனை செய்ய திருவுளம்பற்றியதற்கும்,

(b) சுதேச முறை வைத்தியர்களை மாகாண ஆரோக்கிய ஸ்தாபனங்களில் சேர்த்துக்கொள்ள சிபார்சு செய்வதற்கும்,

(c) ஆயுர்வேதக்கலையை நன்கு பரிசீலனையும், ஆழ்ந்த ஆராய்ச்சியும் செய்து, கவனியாது விட்டிருக்கும் விஷயங்களையும், எல்லாவற்றையும் ஒன்றும் விட்டுப்போகாமல் பொறுப்புடனும், துரிதமாகவும் செய்து முடிக்க இந்திய சர்க்காருக்கு யுக்தி சொல்லியிருப்பதற்கும்,

(d) வைத்திய வித்யா நூல்களை சேர்த்து புதுப்பிக்கவும், தொகுக்கவும் பாட வாரியாக குறிக்கவும் சிபார்சு செய்திருப்பதற்கும்,

இந்த சபை நன்றி தெரிவித்துக்கொள்ளுவதோடு நாடு முழுவதுக்கும் ஏற்படுத்தியிருக்கும் பயிற்சி முறைகளின் அடிப்படையானது, தப்பான விவாதத்தினால் ஏற்பட்டிருக்கிறதென்றும் இது உறுதியான பிற்போக்கு கொள்கையாய் முடியுமென்றும் பல காரணங்களையொட்டி ஆயுர்வேத வளர்ச்சிக்கு நன்மை பயக்காது என்றும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறது.



(A) பட்ட முறைக்கும் பட்டய முறைக்கும் Pathology, Physiology, Pharmacology, Materia Medico, Thereanpatics, Clinical இந்த பாடங்களை மட்டும் குறிப்பிடுவதாலும், ரண சிகிச்சை போன்ற மற்றைய அறிவுக்கு தற்கால முழுவதும் நம்பியிருப்பதாலும், ஆயுர்வேத வளர்ச்சிக்கு இது பெருந்தடையாய் விடும். ஆயுர்வேத கல்வியில் விட்டுப்போனவைகளை வெளிவராமல் தடுப்பதுமன்றி அறை குறையாக விருக்கும் பாகங்களையும் அடியோடு அழித்துவிட்டு ஆயுர்வேதமே நாளடைவில் மறைந்துபோக வழிகாட்டியாய்விடும். (B) மேலும் மேல்நாட்டு வைத்திய பட்டதாரிகளுக்கு மேல்நோக்காக ஆயுர்வேத கலையில் சில பாகங்களில் பயிற்சி கொடுத்து அவர்களையும் ஆயுர்வேத நிபுணர்களென்றும், ஆயுர்வேத வைத்தியர்களென்றும் அழைப்பதும், ஆதரிப்பதும் கேலிக்கூத்தாகும்.

இன்னம் கொஞ்ச காலத்திற்கு பள்ளிகளையும், கல்லூரிகளையும் ஸ்தாபனம் செய்ய மத்திய சர்க்காரும், மாகாண சர்க்காரும் முயற்சிப்பதை நிறுத்திவைக்கவேண்டுமென்று இச்சபை அழுத்தமாக கேட்டுக்கொள்ளுகிறது.

ஆயுர்வேத கலையிலுள்ள எல்லா அம்சங்களையும் உயர்ந்த முறையில் ஆராய்ந்தும், வேறு முறையிலிருந்து இதில் குறைவுபட்டிருக்கும் விஷயங்களை தொகுத்து புகுத்தியும், பயிற்சிக்கு வேண்டிய பாட புத்தகங்களை திட்டங்களுக்கு தகுந்தவாறு ஏற்படுத்தியும், தொகுத்தும், பதிப்பித்தும், ஆயுர்வேத முறையில் தேர்ந்த அனுபவமுள்ள அறிவாளிகளின் உதவியைக் கொண்டு இக்கலையை பூர்த்தி செய்துகொண்டபின் ஏதாவது மறுகாரியம் செய்ய இயலும்.

மத்திய சர்க்காரால் ஏற்பட இருக்கும் ஆராய்ச்சிசாலை திருப்திகரமாகவும் உருப்படியாகவும் வேலை செய்யவேண்டுமானால் அதன் தலைமையிலும் அதன் நிர்வாகத்தின் பல பிரிவுகளிலும், ஆயுர்வேத வைத்தியர்களையே அமர்த்திவைக்கவேண்டும்.

அப்பொழுதுதான் கல்லூரி ஆரம்பிப்பதோ, திட்டம் அமைப்பதோ இந்த பிரசினைகளை கிளப்பும் காலமாக ஏற்படும். பல பிரிவுகளில் பாட புத்தகங்கள் தயாராகவேண்டும். இவைகளைக்கொண்டுதான் தனது சொந்த அடிப்படையைக்கொண்டே ஆயுர்வேதம் வளர்ந்து மக்களுடைய தேவைக்கும், நல்வாழ்க்கைக்கும் பிரயோசனமான பலனை அளிக்கும்.

ஜெய் ஆயுர்வேத்!

இந்தியா பிரதம மந்திரி, இந்தியா சுகாதார மந்திரி, மாகாண சுகாதார மந்திரி, அகில இந்தியா ஆயுர்வேத மகாமண்டலம், மாகாண மகா மண்டலங்கள் இவர்களுக்கு மேற்கண்ட தீர்மானங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

## சுகாதாரத்தில்
## சர்க்கார் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

### பண்டித நேரு வற்புறுத்தல் : சுகாதார மகாநாட்டில் பிரசங்கம்.

### மருந்தைவிட போஷாக்கு உணவும், நல்ல ஜாகையும்தான் முக்யம்.

### நவீன வைத்ய முறையிலும் நாட்டு வைத்யர்களுக்கு பயிற்சி அவசியம்.

---

சுற்று வட்டாரங்களை சுத்தமாக வைத்துக்கொள்வது, நல்ல காற்றோட்டம், நல்ல போஷாக்கு சத்துள்ள உணவு, சௌகரியமான ஜாகை முதலியவை போன்ற பொது சுகாதார வசதிகள் செய்து தருவதில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தவேண்டுமென்று பிரதம மந்திரி பண்டித நேரு வற்புறுத்தினர்.

31—8—50 & 1—9—50 ல் டில்லியில் நடைபெற்ற மூன்ருவது **சுகாதார மந்திரிகள்** மகாநாட்டை ஆரம்பித்துவைத்துப் பேசுகையிலேயே நேருஜி மேற்கண்டவாறு கூறினர்.

மருந்துகளையும் மாத்திரைகளையும்விட நல்ல போஷாக்கு சத்துள்ள உணவு, காற்ரோட்டமான வீடு முதலியவைதான் பொது சுகாதாரத்தின் அடிப்படையான விஷயங்களென்றும் இந்த இரண்டு அடிப்படையான பிரச்னைகள் கவனிக்கப்படாவிடில் சுகாதார அபிவிருத்தி சாத்யமில்லை என்றும் நேருஜி கூறினர்.

மகாநாட்டை ஆரம்பித்து வைத்து நேருஜி செய்த பிரசங்கத்தின் சாரம் வருமாறு:—

ஒவ்வொருவரும் தத்தம் சுகாதார வசதிகளை மட்டும் கவனத்துக்குக் கொண்டு பொது சுகாதாரத்தை கவனிக்காவிடில் பிரயோஜனமே கிடையாது. மருந்துகளைச் சாப்பிட்டுவிடுவதனல் மட்டும் பொது சுகாதாரம் அபிவிருத்தி அடைவதில்லை. ஒருவனுக்குப் போஷாக்குச் சத்துள்ள சாப்பாடு கிடைக்காவிடில் அவன் பலஹீனமாயிருக்கிறன், நோயை அவனல் தடுக்க முடியாது. இன்று அவனுக்கு சிகித்சை அளித்துவிட்டால் நாளை மீண்டும் நோய்க்கு இரையாகிறன் ஏனெனில் அவன் உயிர் வாழத் தேவையான வசதிகள் இல்லை. நல்ல காற்ரோட்டமுள்ள வீடுகளில் அவன் வசிப்பதில்லை எனவே உணவையும் ஜாகையையும்தான் பொது சுகாதாரம் வெகுவாக பொறுத்திருக்கிறது தனிப்பட்ட ரீதியில் என்னதான் சிகித்ஸை செய்தாலும் பொது சுகாதார அபிவிருத்தி இல்லாதவரை எவ்வித பிரயோஜனமும் கிடையாது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள உணவுக்கஷ்டத்தையும், அஸ்ஸாம் பூகம்பத்தையும், ஜாகை கஷ்டத்தையும் பற்றி நேரு குறிப்பிட்டு இப்பிரச்னைகளைத் தீர்க்க சர்க்கார் சகல முயற்சிகளும் செய்து வருகிறதென்ருர். சகல விஷயங்களுக்கும் பணம் தேவையாக இருந்தாலும் அப்படி நிறைய பணம் வந்து விட்டாலும் கூட திடீரென மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திவிட முடியாதென்றும் நேரு கூறினர்.



மேற்கத்திய வைத்ய முறை, கிழக்கத்திய வைத்ய முறை என்ற பாகுபாடு செய்வதை கண்டித்து நேரு கூறியதாவது:—

தற்கால வைத்ய முறையில் பொது சுகாதாரம், தனிப்பட்ட சுகாதாரம் பற்றிய பல அம்சங்கள் அடங்கியிருக்கின்றன. எந்த வைத்ய முறையையும் விஞ்ஞான ரீதியில் நேச மனப்பான்மையுடனும் நுணுக்கமாகவும் அணுகவேண்டும். மற்ற வைத்திய முறைகளிலுள்ள நல்ல அம்சங்களை கிரகித்துக்கொள்ளவேண்டும். நமது ஆயுர்வேத யூனனி வைத்ய முறையையும், மேனட்டு வைத்ய முறையையும் எப்படி இணைப்பது என்பது எனக்கு தெரியவில்லை. இரு வைத்ய முறைகளையும் இணைப்பது அவசியமென்ருலும்கூட இரண்டு வைத்ய முறைகளும் பிரச்னைகளை அணுகும் வெவ்வேருனமை. எது எப்படியாயினும் நாட்டு வைத்யர்களுக்கு தற்கால வைத்திய முறையில் பயிற்சி அளிக்கப்படவேண்டும் பயிற்சி பெற்ற பிறகு எந்த முறையை அவன் அனுஷ்டித்தாலும் பாவாயில்லை. தற்கால வைத்திய முறை நோய் வருமுன் தடுக்கும் முறைகள் பற்றிக் கூறுவதுதான். கூட இயற்கை சிகித்ஸைக்கும் வழி செய்கிறது. வைத்ய முறைகளில் எந்த முறையும் பரிபூர்ணமானதல்ல. ஆயுர்வேத யூனனி வைத்ய முறைகள் மிகச் சிறந்த முறைகள்தான். இருந்தாலும் ஆயுர்வேதத்திலுள்ள வாத, பித்த, கப விவகாரம் தற்கால வைத்தியர்களின் வாதத்திற்கு முற்றிலும் விரோதமாக இருக்கிறது. இவ்விதம் பிரச்னைகளை அணுகும் விதத்திலேயே அடிப்படையான தகாறு இருக்கிறது.

அரசாங்கத்தின் திருஷ்டியுடன் பார்த்தால் தனிப்பட்ட சிகித்ஸையை காட்டிலும் பொது சுகாதாரம்தான் மிகவும் முக்யமானது. அநேகமாக இதற்கு செலவும் குறைவு. மக்களின் பொது ஆரோக்யத்தை உயர்த்தினல் தேசத்தின் உற்பத்தி சக்தியும் அதிகரிக்கும் என்ருர் நேரு.

### சுகாதார மந்திரி பிரசங்கம்.

சுகாதார மந்திரி ஸ்ரீமதி ராஜகுமாரி அம்ருதகௌர் மகாநாட்டுக்கு தலைமை வகித்துப் பேசுகையில் மக்களின் தேகாரோக்யத்தை அபிவிருத்தி செய்ய பரிபூரண சுகாதார சர்வீஸ் ஒன்று வேண்டுமென்றும் மற்ற எந்த வைத்ய முறையிலும் பயிற்சி பெறுவதற்கு முன் தற்கால வைத்ய முறையின் அடிப்படையான விஷயங்களில் இனி ஒவ்வொரு டாக்டருக்கும் கட்டாயம் பயிற்சி வேண்டுமென்றும் இதுபற்றிய திட்டமான யோசனை கூற இம்மகாநாடு ஒரு உப கமிட்டி நியமிக்கவேண்டுமென்றும் கூறினர்

நம் நாட்டு வைத்ய முறைகளான ஆயுர்வேதம், யூனனி, முன் காலத்தில் பிரபலமாக இருந்தாலும்கூட தற்கால வைத்ய முறைகளில் பல புதிய வசதிகள் இருக்கின்றன என்றும் எனவே நம் நாட்டு வைத்ய முறைகளை மட்டும் ஆதாரமாகக் கொண்டு தேசீய சுகாதார சர்வீஸ் ஏற்படுத்துவது அசாத்யம் என்றும் நம் நாட்டு வைத்திய முறைகளில் ஆராய்ச்சி நடத்த சர்க்கார் உதவி அளிக்கத் தயாரென்றும் ஸ்ரீமதி அம்ருதகௌர் கூறினர். நம்நாட்டு வைத்திய முறைகளை சர்க்கார் கொன்றுவிட விரும்புகிறதென்று சிலர் கூறும் குற்றச்சாட்டுகளை சுகாதார மந்திரி மறுத்தார்.

கிறிஸ்தவ மிஷன்களின் சேவைகளை அம்ருதகௌர் பாராட்டினர் ஆனால் ஜனங்களுக்கு சிகிச்சை செய்வதை சாக்காக வைத்துக்கொண்டு நோயாளிகளை கிறிஸ்துவ மதத்திற்கு மாற்றுவது தகாதென்றும் மந்திரி குறிப்பிட்டார். சோப்ரா கமிட்டி யாதாஸ்து, ஹோமியோபதி கமிட்டி யாதாஸ்து, அகில இந்திய சுகாதார சர்வீஸ் ஏற்படுத்துவது, சுகாதார கவுன்ஸிலில் அமைப்பது தனிப்பட்ட சுகாதார ஸ்தாபனங்கள், பங்கு முதலியவை பற்றி மகாநாட்டில் விவாதிக்கப்படும் மகாநாடு செப் 2 தேதி வரை நடைபெறும்

## சித்த வைத்தியத்திற்கு சர்க்கார் ஊக்கம் அளிக்கவேண்டும்.

### அ. இ. சித்த வைத்திய சங்க கமிட்டி வற்புறுத்தல்.

அகில இந்திய சித்த வைத்திய சங்கத்தின் பொதுக்காரியதரிசி சித்த வைத்தியமணி டாக்டர் எஸ். பார்த்தசாரதி பத்திரிகையில் விடுத்துள்ள அறிக்கையொன்றில் கூறுவதாவது:—

அகில இந்திய சித்த வைத்திய சங்கத்தின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் 17—9—50 ஞாயிறன்று சென்னை தாதா முத்தியப்பன் தெருவு 37 நெ. எண்ணுள்ள சங்க கட்டிடத்தில் கூடியது. கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:—

1. இந்திய அரசாங்க சுகாதார மந்திரி ஸ்ரீமதி ராஜகுமாரி அமிர்த கௌரியின் தலைமையில் சமீபத்தில் கூடிய மாகாண சமஸ்தான சுகாதார மந்திரிகள் ஆயுர்வேத யூனானி ஆங்கிலம் ஆகிய வைத்திய முறைகளை மட்டும் பாராட்டி அவைகளுக்கு ஆக்கம் தரும் முறையில் செயலாற்றியதுடன், "சித்த வைத்திய கலை"யைப் பற்றிச் சிந்தித்துக்கூடப் பார்க்காததைக் காண அகில இந்திய சித்த வைத்திய சங்கம் வருந்துகிறது.

2. சித்த வைத்தியக் கலையின் பெயரால் நடைபெற்று வரும் வைத்தியப் பயிற்சிகளுக்கும், சித்த வைத்தியர்களின் மேம்பாட்டிற்காக கடந்த 30 வருட காலமாகச் சேவை செய்துவரும் பதிவு பெற்ற அகில இந்திய சித்த வைத்ய சங்கத்திற்கும், இந்திய அரசாங்கமும் சென்னை மாகாண சர்க்காரும் ஆக்கமளிக்க வேண்டும். ஏழை எளியவர்கள் போற்றி நாடி சிகிச்சை மூலம் தங்கள் நோய்களை மிகக் குறைவான செலவில் தீர்த்துக்கொள்ளும் "சித்த வைத்திய முறை" பொருளாதார சிக்கனமானது. அத்தகைய "சித்தக்கது" (நாட்டு வைத்திய முறை) க்கு இந்திய சென்னை சர்க்கார்கள் ஆராய்ச்சிக்கூடம் போன்றவைகள் ஏற்படுத்திக்கொடுத்து கலையைப் புறக்கணிக்காமல் காத்தருளுமாறு பெரிதும் வற்புறுத்துகிறது.



## க்ஷயரோக நிவாரணம்.

கவிராஜ் E. S. இராமசாமி ஜோதிடர், R. I. M. P.
எரிசினம்பட்டி, உடுமல்பேட்டை தாலூகா.

க்ஷய ரோகத்தைப் போக்கவல்ல ஆராய்ச்சியில் ஈடுபட்டு பற்பல தேசத்தில் பலரால் பலவிதமான காரியங்கள் கூறப்படுகின்றன. அவ்வித செயலில் முற்றும் ஈடுபட்டு வியாதியைப் போக்கிக்கொண்டவரையும், கர்ம வியாதிகளைப் போக்கி சாதாரண நிலை உண்டாக்கிய டாக்டரொருவரும் இதுவரை இல்லையென்று கூறுவது மிகையாகாதென்றே எண்ணுகிறேன்.

க்ஷய ரோகம் மாத்திரமல்ல இவை போன்ற குட்டம் முதலிய கடூரமான ரோகத்திற்கும், பல்லாயிர வருடங்கட்கு முன்னே நம் சித்தர்களால் அற்புத மருந்தும், வியாதியஸ்தன் நடந்துகொள்ளவேண்டிய முறையும் தெளிவாகக் கூறப்பெற்றுள்ளன. இது விஷயமாய் இனிமேல் யாருடைய ஆராய்ச்சியும் தேவையில்லை என்ப.

யாவராலும் ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கமுடியாத முறைகளமைந்த சித்தர், ஆயுர்வேதம், நூல்களில் அற்புதமானதும் ஆச்சரியப்படத்தக்கதுமான அனேக முறைகள் என்போன்று மறைத்து வைத்திருந்த பற்பலரால் மறைந்துபோய்விட்டனவென்றும், மறைந்திருக்கின்றனவென்றும் எண்ணுகிறேன்.

என் ஆசாரிய சுவாமிகள் அறிந்தறிவித்துள்ள பற்பல இரகசிய மருந்துகளிலொன்றாகிய க்ஷயரோகத்திற்குரிய ஔஷதம் ஒன்று வெளியிடுகின்றேன்.

### சுந்தர சந்ரோதயம்.

| | | | |
|---|---|---|---|
| அட்டேக் செந்தூரம் | விராகனிடை | 1½ | முறை அடுத்த இதழில் வரும். |
| தங்க பற்பம் | ,, | 1½ | |
| கெட்டி முத்து | ,, | 1 | |
| பவழம் சுத்தி செய்தது | ,, | 1 | |
| பூரம் ,, | ,, | 1/8 | |

இவைகளை சுத்தமான கல்வத்தில் போட்டு கொடிவேலியிலைச்சாறு விட்டு 4 சாமம் அரைத்து வில்லை தட்டிக்காயவைத்து அகலில் வைத்து மேல் அகல்மூடி சீலை செய்து உலர்ந்தபின் குமரி சாற்றைப்பூசி உலர்த்தி, 35 வரட்டியால் புடமிட பற்பம் மஞ்சள் சிகப்பாகும். நிறம் எங்கனமாயினும் குற்றமில்லை. வேளைக்கு ½ முதல் 1 அரிசிப் பிரமாணம் தக்க அனுபானத்தில் அல்லது

வாசாரிஷ்டம், கஸ்தூரி சேராத தசமூலாரிஷ்டம் ஏதோ ஒன்று கொடுத்த 2 நாழிகையின் பின் தினம் 2 வேளை தேகபலங்கண்டு கொடுத்துவர க்ஷயம், உஷ்ணம், பலஹீனம், நீர்ரோகம், எலும்புருக்கி, சூதகப்போக்கு, ஈரல், குண்டிக்காய், குடல் ரணங்கள் குணமாகும்.

க்ஷய சுர அனுபானம். **பூநாகபற்பம்**—பசுமோரில் சுத்தி செய்த பூநாகத்தை செம்மண் பூமியில் உண்டான ஆடுதின்னாம் பாளைச்சாற்றால் மெழுகுபதமாய் அரைத்து வில்லைதட்டி உலர்த்தி ஓட்டிலிட்டுச் சீலை செய்து காயவைத்து குமரிச்சாறுபூசி உலர்த்தி 100 காட்டெருவில் புடமிடவும். இவ்வாறு 10 புடமிட பற்பம்.

1/2, 1/4 குன்றி பூநாக பற்பமும், 1/2 அரிசிப்பிரமாணம் சுந்தர சந்ரோதயமும் கூட்டி, சீனாக்கற்கண்டு பசுநெய்விட்டு அரைத்த சாந்தில் கலந்து கொடுக்க க்ஷய காங்கை சீக்கிரம் குணமாகும். காங்கை நின்றபின் சுந்தர சந்ரோதயம் மாத்திரம் கொடுத்து வரவும். க்ஷயரோகிகளுக்கு மலைவாசமும் தேவையில்லை, மற்ற வாசமும் தேவையில்லை. தான் இருக்குமிடத்திருந்தே சிகித்சை பெற்றுக்கொள்வது நல்லது.

## பத்தியம்.

கடுமையான வியாதிகள் வராமல் தடுக்கவும், வந்தபின்பு போக்கவும் தமிழ் சித்தர்கள் அனுஷ்டிக்குப்படி திருவாய் மலர்ந்தருளிய முறை வருமாறு:

" காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றின்
நாமம் கெடக் கெடு நோய் "

காமத்தால்—வாதமும்
வெகுளியால்—பித்தமும்
மயக்கத்தால்—சிலேத்துமமும்

நிலை தவறி திரிதோஷங்கள் உண்டாகி இயற்கைநிலை பிசகி, மருந்திற்கு வசப்படாத வியாதிகள் ஏற்பட்டு உலகத்தில் உள்ள திரவியத்தை, அறியாத மாந்தரால் ஆராய்ச்சிக்காகச் செலவிட்டு அல்லல்வாய்ப்பட்டு அறியாத அன்னியருக்கு அடிமையாக்கி அவர் சொல்கேட்டு அவரையே எதிர்பார்த்து, அவராலும் பிழைக்கவைக்க முடியாமல் உலகம் அழிவின் நெறியில் போகும் என்ற கலியுகச் செயல் கண்டன்றோ சித்தர்கள் மறைந்துலாவுகின்றனர். தெய்வீக சித்தர்களின் நூல் மொழிகள் பாராட்டப்படாமல் ஒதுங்கியன்றோ கிடக்கிறது. இனியாவது தன்னலங்கருதி அரசாங்கம் நேர் கண் கொண்டு நம் கலையின் திறமையைக் கண்டு களிக்குமா?



காமத்தால் —வாதம் நிலை பிசகும்.

வாதம் என்பது வாய்வு மாத்திரமன்று, பிராணன் பிராணவாயு நரம்பு மண்டலம் தாது முதலிய ஜீவாதாரத்தைக் குறிப்பிடும்.

காமம் என்பது ஆசை என்ற பொருளமைந்தது.

இகபர சுகத்தை விரும்புவோர் எவர்க்கும் ஆசை தேவையே ஆசை அளவில் அமைந்தால் தேக இயற்கையைப் பாதிக்க முடியாது. பேராசையாக ஏற்படுமானால் இயற்கை நிலையில் உள்ள வாதம் நிலை தவறும். இவ்வாறு தவறின வாதத்தை மருந்தினால் சமனஞ் செய்து மீண்டும் வராமல் இருக்கவேண்டுமானால் காமம் என்கிற பேராசைக்கு தடையுத்தரவு போட்டு நேர்மை நிலைக்கச் செய்யவேண்டும். நிலைக்கச் செய்தால் வாத சமனத்திற்காக மறுபடி வைத்தியனைத் தேடவேண்டிய அவசியம் ஏற்படாது.

காமம் என்றால் போக இச்சையையே அதிகம் குறிப்பிடு... என்பீர்கள்? ஆம் .........ஆனால்!

போக இச்சையை முற்றிலும் நீக்குவதா ?

நீக்கியிருக்குபபடி எந்த நூலும் தெரிவிக்கவில்லை காலமாறுதலில் சகல ஜீவன்கட்கும் போக இச்சை அதிகப்படும். அக்காலம் மனோலயமுள்ள தவசிகளும் போக எண்ணம்பெறும் அளவில் இயற்கை நெறி அமைந்துள்ளது,

கம்பர் இராமாயணம் — கார்காலப்படலம்.

" அளவில் காரெனும் அப்பெரும் பருவம் வந்தடைந்தால்
தளர்வ ரென்பது தவப்புரி வோருக்குந் தருமால்
கிளவி தேனினு மமிழ்தினுங் கினைத்த வெள்வளைதோள்
வளவி யுண்டவன் வருந்துமென்றுலது வருத்தோ "

தவம்புரிவோருக்கும் இயற்கையில் உண்டாகும் போகயிச்சையை, யாம் வெறுக்கவேண்டியதில்லை மயக்கம் ஏற்படாத நிதானமுடன் நேர்மையான கூடுதல் ஆயுளுக்கு அத்யாவசியமானது (இயற்கையான தாது பலமுள்ள போக இச்சையை தன்வெளிவேஷமான கீர்த்திக்குப்பயந்து அடங்கிவந்த சந்நியாசிகளுக்கு ஆயுள் குறைவு கண் கூடு) .

போகமுள்ள பொறிகளையின் செயலையும், அதேயதுள்ள மற்ற காளையின் பொலிவையும் கவனித்தால் அத்தகையோர் மனோபலம் அறியக்கிடக்கின்றது. மண், பொன், ஏனைய ஆசைகளையும் தன் நேர்மையான செயலில் வருவதை மயக்கமில்லாத முறையில் அனுபவிப்பது என வைத்துக்கொண்டால் எந்தக் கஷ்டமும் நேரிடாது

வெகுளி :— "தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்,,

தன்னை மரணத்திலிருந்து தப்புவிக்கவேண்டும் என்ற எண்ணத்தையுடையானொருவன் (வியாதியஸ்தன்) கோபம் வராது இருக்கும் நெறியில் நடக்கக் கடவன்.

கோபத்தால் பித்தம் தன்னிலை பிசகி, ஜாடராக்கினி முதல் தெய்வக்கனல்வரை சிதருண்டு காயகற்பம் என்கிற தேவ ஔசதமும் பயன்தரா தொழிகின்றன. இன்னும் கோபத்தால் ஏற்படும் பிரபலமான கெடுதியை திருக்குறள் வெகுளாமை என்ற அதிகாரத்திற்கு விரிவுரை எழுதிப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

**மயக்கம்** என்பது: தெளிவின்மை சோம்பல், உன்மத்தம், பக்குதல், அறிவைக் கெடுத்துக்கொள்ளுதல், கலத்தல், கலங்குதல், அன்பினடங்குதல் அரசரைக்கண்டு மருளல், வாடல், ஒடுங்குதல முதலிய பிறவும் ஓரினமுமாம். இத்யாதி செயல்கள் தன்பால் சேராமலும், தன்னால் பிறர்க்கு நேராமலும், நேரினும் சாதாரணமாக நேரும்படியும் நேர்மையாக வைத்துக்கொண்டால்

"நமனார்க்கிங் கேது கவை நாமிருக்கு மிடத்தே,

காமம் வெகுளி மயக்கம் இம்மூன்றும் நிலை பிசகும்போது மரணமும், தன்னிலையிலேயே இருக்கும்போது காயசித்தியும் சித்திக்கும் என்ப.

ராஜ கருவிகள் கெட்டுப்போய் வியாதியில்வருந்தும் ஒருவன் இவ்வழியைப் பின்பற்றி இகத்தின் கர்மத்தால் உண்டாகும் பல மயக்கச் செயல்களில் ஈடுபடாதிருந்து ஔசதமும் உண்டால் பழுதடைந்த கருவிகள் தன்னிலைபெற்று, வெட்டுப்பட்ட மரம் தளிர்த்து வளர்ந்தனபோலப் பொலிவுடன் விளங்குவன் என்க.

க்ஷய ரோகத்தில் நுண்ணிய நுரையீரல் அழிந்தபின்பு எவ்வாறு தன்னிலை பெற முடியுமென்பீர்களேல்?

அற்புதமான பல்லாயிர கருவிகளமைந்த அழகான ஆயிரமாயிரங் குழந்தைகளை விளையாட்டிலேயே சிருஷ்டித்துக்கொடுக்க வல்லதும் ஜாக்கிர ஜகத்தை இவ்வாறுதான் சிருஷ்டிக்கின்றேன் என்பதற்குச் சாட்சியாகச் சொற்பனசகம் அடிக்கடி காட்டிக் கொண்டுள்ள ஜீவாத்மா உள்ள உடலில் ஒரு கருவியைப் பண்படுத்துவதில் என்ன ஆச்சரியம்! மிகவும் எளிதினுமெளிது.

(தொடரும்.)

---



த்தில் இந்த சரக்குடன் ஏழுவித சிந்தூரங்களும் கூறப்பட்டுள்ளன: அவையாவன — வெள்வங்கம், வெள்ளி, கருவங்கம், அயம், அப்பிரகம், மண்டூரம், ரசசிந்தூரம், ஆகியவைகளே. ரசசிந்தூரம் என்ற பெயருடன் நமது கடைகளில ஓர் கட்டியான வைப்புச் சரக்கு விற்கப்படுகின்றது. அதை இங்கு எடுத்துக்கொள்ளக்கூடாது. குப்பி எரிப்பு சிந்தூரத்தையே எடுத்துக் கொள்ளவேண்டும். சார்ங்கதர உரைகளில் இந்த ஏழு சிந்தூரங்களும் இடையில் யாராலோ சேர்க்கப்பட்டவைஎன கூறப்பட்டுள்ளது. ஹிமயம்முதல் குமரிவரையில் உள்ள வைத்தியர்கள் வழக்கமாக சிந்தூரங்கள் ஏழையும் சேர்த்தே செய்து வருகின்றனர்.

சுலோகம் 27 — **ஆபாதி குக்கலு.**

ஆபாதி சூர்ணத்தில் சொல்லப்பட்ட சரக்குகள் பனிரெண்டு பூலாங்கிழங்கு, சிறுநெரிஞ்சில் வேர், இவைகளை ஸம எடையாக எடுத்து மொத்த எடைக்கு சமமாக குக்கிலும், குக்கில் எடையில் பாதி அளவு நெய்யும் சேர்த்துக் கலந்து வேளைக்கு அரைத் தோலா அளவு சாராயம், மாம்ச ரசம், சுடுநீர், பால், கஞ்சி இந்த அனுபானங்களில் ஏதாவதொன்றில் சாப்பிட கபநோய், வாத நோய், கால்முடக்கம், கிருத்ரஸி, வாதரக்தம், குஷ்டம், யோனி ரோகங்கள், அஸ்திவாதம், மஜ்ஜாவாதம், சந்திவாதம், முதுகு வலி, முழங்கால்வாதம், ஆகியவை போம்.

குறிப்பு — ஆபாதி சூர்ணமென்பது இதே நூலில் 11-வது பக்கத்தில் 11-வது சுலோகத்தில், கூறப்பட்டுள்ளது. அதில் சொல்லப்பட்ட சரக்குகள் மொத்தம் பனிரெண்டு. இந்த சுலோகத்தில் சொல்லப்பட்ட சரக்குகள் மூன்று ஆக மொத்தம் 15 சரக்குகள் குக்கில் நீங்கலாக மீதியுள்ள சரக்குகளை சமஎடையாக எடுத்துக்கொள்ளவேண்டும். அதாவது வகைக்கு ஒரு பலம் எடுத்துக்கொண்டால் மொத்தம் பதினான்கு பலங்கள் ஆகும். அம்பொழுது சுத்தம் செய்த குக்கில் பதினான்கு பலம் எடுத்துக்கொள்ளவேண்டும். கடைச் சரக்குகளைப் பொடி செய்து கொண்டு குக்கிலையும் பொடி செய்து கலந்து ஏழு பலம் நெய்யையும் கலந்து கொள்ளவேண்டும் இந்த மருந்துபோல குக்கில் அதிகமாகச்சேரும், எல்லா மருந்துகளிலும் குக்கிலைப் பாகு வைத்து மருந்துகளைச் சேர்த்துக் கலந்து கொள்வதுதான் நலம். பாகுவைக்காமல் பொடிகளையும் குக்கிலையும் சேர்ப்பது என்பது கஷ்டம். "சூர்யாதவஹ்நி ஸித்தேந க்வசித் குக்கலு நாவலம்" என்ற சார்ங்கதர வசனத்தில் சில மருந்துகளில் பாகுவைக்காமல் குக்கலுவை அப்படியே, சேர்க்கவேணுமென்று கூறப்பட்டுள்ளது. இம்மருந்து சக்ரதத்தம், யோகரத்னாகரம் முதலியவைகளில் வாத வியாதி சிகித்சையில் கூறப்பட்டுள்ளது. ஸ்வல்ப பேதம் காணப்படுகின்றது.

## சுலோகம் 28 — **கதிராதிவடி—கதிராதி தைலம்.**

அகில், காட்டாத்திப்பூ, நாற்ற சந்தனம், அதிமதுரம், கொம்பரக்கு, ப்ரபௌண்டரீகம், வெட்டிவேர், சந்தனம் விலாமிச்சவேர், கட்பலம், சிறுநாகப்பூ, கருவாப்பட்டை, பச்சிலை, ஏலம், கடுக்காய்த்தோல், தான்றித்தோல், நெல்லிவற்றல், பதுமகம், தொட்டால் சுருங்கி, சிற்றேலம், சடாமாஞ்சி, கோரைக்கிழங்கு, சிறுகாஞ்சொரி, பூங்காவி, லோத்திப்பட்டை, படானி லோத்திப்பட்டை, மஞ்சள், மரமஞ்சள், ரஸாஞ்சனம், சௌவீராஞ்சனம், மஞ்சிஷ்டி, முகழம்பூ, ஞாழல், கருங்காலி, ஆலம்விழுது, கருவேலம்பட்டை வகைக்குத் தோலா ஒன்று, கிராம்பு, வால்மிளகு, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, வகைக்கு தோலா நான்கு, இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து கொள்ளவும். கருங்காலி தோலா எண்ணூறு, கருவேம்லபட்டை தோலா நானூறு, இவை இரண்டையும் நன்றாக நொறுக்கி ஓர் பானையில்போட்டு ஜலம் சின்னப்படியில் நூற்றிஇருபத்தெட்டு படிவிட்டு அடுப்பேற்றி முப்பத்திரண்டு படியாக வற்றவைத்து வடிகட்டி அந்தக் கஷாயத்தை ஓர் இருப்புப் பாத்திரத்தில்விட்டு அடுப்பேற்றி எரித்து சுமார் ஒரு படியாகுமளவு சுண்டவைத்து பிறகு முன் வஸ்திரகாயம் செய்த பொடியைப் போட்டுக்கிளறி இறக்கிவைத்து அதில் பதினாறு தோலா பச்சைக்கர்ப்பூரத்தைப் பொடிசெய்து போட்டு நன்றாகக் கலந்து சுண்டைக்காய் அளவு மாத்திரைகளாக உருட்டி காயவைத்து ஒருமாத்திரையை வாயில் அடக்கிக்கொண்டு ஊறும் ஜலத்தை விழுங்க தொண்டை ரோகங்கள், முகரோகங்கள் முழுவதும் விலகும். இதையே தைலமாகவும் செய்யலாம் எப்படியெனில் கருங்காலி தோலா நானூறு, கருவேலம்பட்டை தோலா எண்நூறு, எடுத்து இடித்து முன்போலவே ஜலம்விட்டு கஷாயம் செய்து வடிகட்டி அதில் நல்லெண்ணெவிட்டு முன் சொன்ன கடைச்சரக்குகளில் பச்சைக்கர்ப்பூரம் நீங்கலாக மற்றவைகளை இடித்துப் பொடிசெய்து கல்கமாகப்போட்டு மெழுகு பதத்தில் தைலத்தைக் காய்ச்சி இறக்கி அதில் முன் சொன்னபடி பச்சைக்கர்ப்பூரத்தைப் பொடி செய்துபோட்டு மூடிவைத்து கொப்புளிக்கும் தைலமாக உபயோகிக்க முன் குணமுண்டாகும்.

குறிப்பு:— இம்மருந்து அஷ்டாங்க ஹிருதயத்தில் முகரோக சிகித்ஸையில் சொல்லப்பட்டுள்ளது. போபதேவர் முறையில் மொத்த சரக்கு நாற்பது. அஷ்டாங்க ஹிருதயத்தில் முப்பத்தியேழு. சக்ரதத்தத்தில் முப்பதியைந்து. சக்ரதத்தத்தில் கஷாய விஷயத்தில் மாறுபாடு காணுகின்றது கருங்காலி தோலா நானூறு எனவும் கருவேலம்பட்டை தோலா எண்ணூறு என்றும் குடிகை முறையில் எழுதப்பட்டுள்ளது. இந்த அளவு



தைல முறையில் போபதேவரிலும் அஷ்டாங்க ஹிருதயத்திலும் சொல்லப்பட்டுள்ளது. இங்கு தைல முறையில் தைலத்திற்கு அளவு சொல்லப்படவில்லை. ஸாமான்ய பரிபாஷையைக்கொண்டு நாம் தைலத்தின் அளவை நிச்சயிக்கவேண்டும் கஷாயத்தால் தைலத்தை நிச்சயிப்பதாகில் அப்பொழுது கஷாயத்தின் அளவில் நான்கில் ஒருபங்கு தைலம் விடவேண்டும் இங்கு கஷாயம் சின்னப்படி முப்பத்திரண்டாக இருப்பதால் அதில் நாலில் ஒரு பங்கு பார்க்கும்பொழுது சின்னப்படியில் எட்டுப்படி ஆகின்றது. கல்க சாமான்களைக்கொண்டு பார்த்தால் பச்சைக்கர்ப்பூரம் நீங்கலாக மொத்தம் சரக்கு நாற்பதற்கு எடை ஐம்பத்திரண்டு தோலா ஆகிறது. இந்த கல்க திரவியத்திற்கு நான்கு மடங்கு தைலம் சேர்த்தால் சின்னப்படி மூன்றேகால் ஆகிறது. ஆகவே இங்கு கஷாய அளவைக்கொண்டு எண்ணெ அளவை எடுத்துக்கொள்வது உசிதம், ஆகவே எட்டுப்படி நல்லெண்ணெயில் கஷாயத்தைச் சேர்த்து கல்க சாமான்களைக் கலந்து தைலத்தை வடித்து பிறகு பச்சைக்கர்பூரத்தைச் சேர்த்துக்கொள்வது உசிதம்.

## சுலோகம் 29 — **கோலாதி** குடிகா—**பத்யாதி** குடிகா.

இலந்தைப் பருப்பு தோலா பனிரெண்டு, சுக்கு, திப்பிலி, மிளகு, வகைக்கு இரண்டு தோலா இரண்டு டிராம், பச்சைக்கர்பூரம் தோலா ஒன்று, நெல்பொரி தோலா நாற்பத்தெட்டு, கருவாப்பட்டை பச்சிலை, ஏலம், வகைக்கு ஒரு தோலா ஒரு டிராம், மூங்கிலுப்பு தோலா முப்பத்திரெண்டு. புளியம்பட்டை தோலா பதினாறு இவைகளை இடித்துப் பொடிசெய்து, ஜீனி தோலா இருநூற்றிநாற்பத்திரண்டு சேர்த்து கலந்து வேளைக்கு ஒரு தோலா சாப்பிட வாந்தி. க்ஷயம், காஸம் ஜ்வரம், ரக்தபித்தம் நீங்கும். இனி பத்யாதி சொல்லப்படுகின்றது — தந்தி நான்கு தோலா, சிவதைவேர் ஒரு தோலா கொடுவேலி வேர்ப்பட்டை நான்கு தோலா, திப்பிலி ஒரு தோலா, இருபது கடுக்காய்களைத் தட்டி எடுத்த தோல், இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து வெல்லம் முப்பத்திரண்டு தோலா பாகுவைத்து அதில் பொடியை போட்டு கிளரி பத்து மாத்திரைகளாக உருட்டி அவசியமானால் வெய்யிலில் காயவைத்து பிறகு ஓர் உருண்டையை சாப்பிட்டு பத்து நாள் கழித்து ஓர் உருண்டை சாப்பிட்டு இவ்விதம் பத்து நாள் விட்டு விட்டு ஓர் உருண்டையாக மொத்தம் பத்து உருண்டையும் சாப்பிட கோடம், மூலம், பாண்டு, அரிப்பு, கிரஹணி, ஆகியவை போம்.

குறிப்பு:— கோலாதி குளிகை வேறு நூல்களில் காணப்படவில்லை பத்யா மோதகத்தில் கடுக்காய் நீங்கலாக மற்றவை நாற்பத்திரண்டு தோலா எடை ஆகின்றது. இருபது கடுக்காயைத் தட்டி எடுத்ததோல் சுமார் மூன்று தோலா எடையிருக்

கும் ஆக மொத்தம் நாற்பத்தைந்து தோலா எடையை பத்து உருண்டை செய்தால் ஓர் உருண்டை சுமார் நான்கு தோலா எடையுள்ளதாக இருக்கும். இதை ஒரு வேளையில் சாப்பிட வேண்டும். அப்பொழுது மூன்று தோலா வெல்லமும், ஒன்றரை தோலா எடையுள்ள மருந்தும் சாப்பிடுவதாக ஆகிறது. பொதுவாக சூர்ணங்களில் ஒரு தோலா எடை சாப்பிடுவதுண்டு. ஆகவே இந்த அளவு பார்வைக்கு அதிகமாகத் தோன்றிய போதிலும் ஆராய்ந்து பார்த்தால் பீதியடைய காரணமில்லை. அஷ்டாங்க ஹிருதயத்தில் விரேசன கல்பத்தில் "குடஸ்யாஷ்டபலே" என்று ஆரம்பித்து இம்மருந்து சொல்லப்பட்டுள்ளது. திப்பிலி, சிவதை வகைக்கு தோலா இரண்டு சேர்க்கவேண்டுமென்று அருணதத்தர் கூறுகிறார்

சுலோகம் 30 **பத்யாதி** குடிகை

கடுக்காய்த்தோல், கோரைக்கிழங்கு, வாய்விளங்கம், சுக்கு, மிளகு. கருவாப்பட்டை, பச்சிலை, ஏலம், நெல்லி வற்றல். செவ்வியம், தேசாவரம், வகைக்குத் தோலா ஒன்று, சிவதை தோலா எட்டு, ஜீனி தோலா ஆறு, தந்தி தோலா மூன்று, இவைகளில் ஜீனி நீங்கலாக மற்றவைகளை இடித்துப் பொடிசெய்து ஜீனியும் சேர்த்து தேவையான தேன்விட்டுப் பிசைந்து வைத்துக்கொண்டு வேளைக்கு அரைத்தோலா முதல் ஒரு தோலாவரை சாப்பிட பாண்டு, மூலம், வீக்கம், குன்மம், ஜ்வரம், வயிற்று வீக்கம், அக்னி மந்தம், பிரமேஹம், க்ஷயம், தலை சுற்றல், காஸம், ஆமவாதம், முதலியன சமிக்கும். வென்னீர் அனுபானத்தில் சாப்பிட மலம் பந்தப்படும்.

குறிப்பு:— இம்முறை அஷ்டாங்க ஹிருதயத்தில் விரேசன கல்பத்தில் "வ்யோஷ த்ரிஜாதக" என்ற சுலோகங்களால் சொல்லப்பட்டிருக்கின்றது. செவ்வியம். தேசாவரம், தந்தி, மூன்று சரக்குகள் போடதேவரில் அதிகப்படியாகவிருக்கின்றன.

சுலோகம் 31—32 **கர்ஜூராதி** குடிகை.

ஜீவனீயகணம் வகைக்கு தோலா இரண்டு. சாரப்பருப்பு தோலா பதினாறு, இலுப்பைப்பூ தோலா பதினாறு, மூங்கிலுப்பு தோலா எட்டு, அதிமதுரம் தோலா ஒன்று, தான்றிக்காய் தோலா நான்கு, சர்க்கரை தோலா நூற்றிருபது, இவைகளில் சர்க்கரை நீங்கலாக மற்றவை இடித்துப் பொடி செய்துகொள்ளவும். சாரப்பருப்பை தனியாகக் கல்வத்திலிட்டு அரைத்துக் கொள்ளவும். இருப்து பேரீச்சம்பழத்தை விதை நீக்கி தனியாக கரும்புச்சாரால் அரைத்து வைத்துக்கொள்ளவும். ஓர் இரும்பு பாத்திரத்தில் பசும் பால் சின்னபடி நான்கு, நெய் சின்னபடி

199577

மதருஸ் ப்ரொவின்ஷியல் இன்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் பார்மஸி அண்டு ஸ்டோர்ஸ் லிமிடெட்,
X 185, அடையாறு, மதருஸ்.

பிரஸிடெண்ட்: வைத்யரத்ன கேப்டன் G. ஸ்ரீநிவாஸமூர்த்தி,
பி.ஏ. பி.எல். எம்.பி.ஸி.எம்.

## அறிக்கை.

1 ஆயுர்வேத, சித்த, யூனனி தேசிய மருந்துகள் சாஸ்திர சம்பந்தமாயும் தக்க மேல் பார்வையுடனும் தயார் செய்து தேசிய மருந்துகள் கையாளப்பட்ட டாக்டர்களுக்கு சப்ளை செய்ய மதருஸ் ப்ரொவின்ஷியல் இன்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் பார்மஸி ஸ்டோர்ஸ் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. டாக்டர்களுக்கு வேண்டிய சுத்தமான மருந்து சாமான்களும், மூலிகைகளும் சப்ளை செய்யப்படும்.

2. தேசீய இந்திய டாக்டர்களும், இதர விதமான பட்டம் பெற்ற தேசீய வைத்தியர்களுக்கும் மாத்திரம் மேற்கண்ட சொஸைடியில் மெம்பராகச் சேரலாம்.

3. ஒரு பங்கின் விலை 5 ரூபாய், பிரவேச கட்டணம் பங்கு 1-க்கு 4 அணு கட்டவேணும். ஒரு மெம்பர் 1000 பங்கு வரை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் பிரவேசக் கட்டணம் எல்லா பங்குகளுக்கும் கட்டவேண்டியது 5 ரூபாய்தான்.

4. மேற்கண்ட சொஸைடியில் நடந்த 3 வருஷத்தில் லேவாதேவி கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

| | | 1945-46 | 1946-47 | 1947-48 |
|---|---|---|---|---|
| 1. | மெம்பர்கள் (தேசீய டாக்டர்கள்) | 261 | 364 | 442 |
| 2. | பங்குத் தொகை | 12,985 | 14,135 | 16,160 |
| 3. | மருந்து விற்பனை | 68,589 | 1,15,683 | 1,38,348 |
| 4. | லாபம் | 6,000 | 15,085 | 40,522 |
| 5. | பங்குக்கு வட்டி (பைலாவில் எற்பட்டபடி) | 5% | 5% | 5% |
| 6. | மருந்து வாங்கியதின் பேரில் லாபம் | 1 ரூபாய்க்கு 1 பை வீதம். | 1 ரூபாய்க்கு 4 பை வீதம். | 1 ரூபாய்க்கு 6 பை வீதம். |

5. தேசீய வைத்தியர்கள் யாவரும் மேல்கண்ட சொஸைடியில் சேர்ந்து தங்களுக்கு வேண்டிய மருந்துகளை வாங்கி சொஸைடியின் லேவாதேவியை அபிவிருத்தி செய்யவேணுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வை. கொண்டல் ராவ்,**
காரியதரிசி.

V.P.A



வைத்ய வாசஸ்பதி

**பண்டிட் P. S. ராமசர்மா**

அவர்களின்

**நீண்ட கால பரீக்ஷை அனுபவங்களினால் கண்டுபிடிக்கப்பட்ட**
**கைகண்ட பலனளிக்கும்.**

# " சக்தி ஸஞ்ஜீவி "

(REGD.)

*குழந்தைகளுடைய ஈரல் குலைக் கட்டிகளை எந்நிலையிலும் போக்குவதிலும், வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்.*

**எங்கும் கிடைக்கும்!**

*தயாரிப்பவர் :—*

## ஸ்ரீ சக்தி விலாஸ வைத்யசாலா,

கரூர். S. I. Ry.

**Published by Pandit P. S. Rama Sarma for Tamil Nad Ayurveda Maha Mandalam & Printed at the Vadivel Press, Karur.**